'தமிழன்' பத்திரிகை
வீடுகளுக்கு நேரடியாக
விநியோகிக்கப்படும்



QR ஐ ஸ்கேன் செய்து
தகவல்களை
பெற்றுக்கொள்ளுங்கள்.
0777983318

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 55 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை
(06.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 20, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## இறக்குமதி மீதான கட்டுப்பாடு இவ்வருட இறுதிக்குள் நீக்கம்

02பக்கம்

# எகிறுகிறது லைட் பில்!

ஜே .வாசு

மின்கட்டணத்தை 32 வீதத்தால் அதிகரிக்க அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீர் மின்னுற்பத்தி வீதம் குறைந்துள்ள அதேசமயம் தொடர்ச்சியான மின்விநியோகத்தை மக்களுக்கு வழங்க வேண்டி இருப்பதால், தனியார் துறையிடமாவது மின்சாரத்தை பெறவேண்டிய தேவை இருப்பதாக மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மின்கட்டணத்தை அதிகரிக்காத பட்சத்தில் அடுத்த 3 மாதகாலத்தில் இலங்கை மின்சாரசபைக்கு 55 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படும் என்பதால் மின்கட்டண உயர்வுக்கு அனுமதியளிக்குமாறு இலங்கை மின்சாரசபை கேட்டுள்ளது.

# சர்வதேச விசாரணை!

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்காக கோரும் சஜித்



நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் சனல் - 4 வெளிப்படுத்தியுள்ள விடயங்கள் குறித்து சர்வதேச மட்ட விசாரணை அவசியமானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று(05) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து வெளிப்படுத்தப்பட்டமைக்கு இலங்கை அரசாங்கம் வெட்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக அரசாங்கம் ஒரு வெளிப்பாட்டைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதன்படி, சனல் - 4 வெளிப்படுத்தியமை தொடர்பில் சர்வதேச மட்ட விசாரணை அவசியமானது" என்றும் பிரேமதாச கூறினார்.

» 02 பக்கம்

## சனல் - 4 காணொளி: விசாரணை செய்வோம்

### மனுஷ அறிவிப்பு

அதிகாலையில் சென்று கோட்டபாய ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார். அதேபோல் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்...

02 பக்கம்

## உண்ணாட்டரசிறை, சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு சட்டமூலங்கள்

### இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இன்றும் நாளையும்

உண்ணாட்டரசிறை (திருத்த) மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு (திருத்த) சட்டமூலங்களின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை இன்று (06) மற்றும் நாளை (07) ஆகிய தினங்களில் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (05) நடைபெற்ற பாராளுமன்ற...

02 பக்கம்



## கற்பிட்டியில் கடல் சங்குகள் மீட்பு





ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டியில் இருந்து சட்டவிரோதமாக மன்னாருக்கு அனுப்புவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கடல் சங்குகள் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் (04) கைப்பற்றப்பட்டுள்ளன. கற்பிட்டியில் இருந்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் ஊடாக மன்னாருக்கு கொண்டு செல்வதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த...

02 பக்கம்

## பரந்துபட்ட அரசியல் கூட்டணிக்கு எதிர்க்கட்சிகளுடன் பேச்சு

### ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியால் எதிர்காலத்தில் கட்டியெழுப்பவுள்ள பரந்துபட்ட அரசியல் கூட்டணிக்கு ஆதரவைப் பெறும் நோக்கில் நடைபெற்ற எதிர்க்கட்சி தரப்பிலுள்ள அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை...

02 பக்கம்

## 166,938 பேர் பல்கலை அனுமதிக்குத் தகுதி

கே.சுபானி

2022 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய, இம்முறை 09 ஆயிரத்து 904 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். அதன்படி உயிரியல் பிரிவில் 817 பேரும் கணிதப் பிரிவில் ஆயிரத்து 8 பேரும் வணிகப் பிரிவில்...

02 பக்கம்

## கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணி இன்று



02பக்கம்

## யாழ்.போதனாவில் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவரின் இடது கை, அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## ஜனாதிபதியை கொல்ல சினைப்பர் தாக்குதல்?

### பதிவிட்டவரிடம் தொடர்ந்து விசாரணை

02பக்கம்

## உள்நாட்டு வருமான வரி சட்டமூலத்தை பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம்

### உயர்நீதிமன்றம் பாராளுமன்றுக்கு அறிவிப்பு

உள்நாட்டு வருமான வரி திருத்தச் சட்டமூலத்தை பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

உள்நாட்டு வருமான வரி திருத்தச் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை அறிவிக்கும்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று இதனை தெரிவித்தார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



இறுதிப்போருக்கான சர்வதேச விசாரணைக்கே இன்னும் வழியில்ல.. இதில ஈஸ்டர் தாக்குதல மட்டும் கண்டுகொள்ளுவாங்களா?

## உடல் உறுப்புகளால் எழுவருக்கு வாழ்வளித்த குருநாகல் மாணவிக்கு உயர்தரத்தில் 3ஏ

கே.சுபானி

உடல் உறுப்புகளை தானமாக கொடுத்து எழுவருக்கு வாழ்வளித்து இவ்வுலகை நீத்த குருநாகல் மலியதேவ வித்தியாலய மாணவி விஹகனா ஆரியசிங்க, வெளியாகியுள்ள 2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வணிகப் பிரிவில் மூன்று பாடங்களிலும் '3ஏ' அதி திறமை சித்திகளைப் பெற்றுள்ளார்.

02 பக்கம்



## பிரமிட் திட்ட பணப் பரிவர்த்தனை செய்தவரின் சொத்துகள் முடக்கம்

கே.சுபானி

சட்டவிரோதமான பிரமிட் திட்ட பணப் பரிவர்த்தனைக்காக இலங்கை மத்திய வங்கியால் தடைசெய்யப்பட்டுள்ள 'ஒன்மெக்ஸ் டீரி' தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் சம்பத் சந்தருவனின் ரூபா 62 கோடிக்கும் அதிக பெறுமதியான 20 சொத்துகளை மறு அறிவித்தல் வரை மாற்றுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு தடைவிதித்து கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் காணி பதிவாளர்கள் நால்வருக்கு நேற்றுமுன்தினம் (04) உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாத்தறை, களுத்துறை,....

02 பக்கம்

### உஷ்



இராஜாங்க அமைச்சர்களை சந்தித்த ஜனாதிபதி ரணில், அவர்களின் பிரச்சினைகளை தீர்க்க உறுதியளித்துள்ளாராம்.

முதற்கட்டமாக இராஜாங்க அமைச்சர்களுக்கு செயலர்களை வழங்கி அமைச்சுகளின் சில அதிகாரங்களை வழங்கவும் உறுதியளித்துள்ளாராம் ஜனாதிபதி.

சில இராஜாங்க அமைச்சர்களை அமைச்சர்களாக்குவது பற்றியும் ரணில் ஆலோசிப்பதாக தகவல்.

## சர்வதேச...

ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேடைக்கு மேடை முதலைக் கண்ணீர் வடித்து, தேர்தலில் வெற்றியடைவதற்காக நிலைமையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்கள். மக்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்தும் இந்த தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் யாரென்ற உண்மை இன்னும் வெளியாகவில்லை.

இன்னும் கத்தோலிக்க மக்கள் மனவேதனையிலிருந்து மீளவில்லை. தொடர்ந்தும் பேராயர் மெல்கம் ரஞ்சித்துக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படக் கூடாது. உள்நாட்டு விசாரணைகளினூடாக உண்மை சூத்திரிகள் யார் என்பதை வெளிப்படுத்த முடியாது. எனவே, ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் கட்டாயம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (05) சபையில் கோரினார்.

சபை அமர்வு ஆரம்பமாகி, இடம்பெற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது கேள்வி முன்வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நானும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது கோட்டபாய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் கூறியதாக தெரிவிக்கிறார்கள். அவ்வாறானவொரு விடயம் இடம்பெற்றிருந்தால் பேராயர் மாத்திரமல்ல, இந்த நாட்டு மக்களுக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை இருந்தது. அந்தப் பிரச்சினைக்கு தீர்ப்பளிக்கும் விடயத்தில் நாங்கள் தோல்வியடைந்துவிட்டோம். கோட்டாபய வெற்றியடைந்துவிட்டார் என்ற நம்பிக்கையிலேயே அவரை தெரிவு செய்தார்கள்.

அவ்வாறு இருக்கையில், நாட்டில் இடம்பெற்ற ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பிரதான சூத்திரதாரிகளை தேடிக் கண்டுப்பிடிக்குமாறு வெளிநாட்டு புலனாய்வுகளினூடாக வெளிநாட்டு ஊடகமொன்று எமது அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமா? இதற்கான வெளிநாடு எமக்கு ஆலோசனை வழங்க வேண்டுமா? உண்மையை தேடிப்பார்ப்பதற்கு எமது நாட்டிலிலுள்ள ஆட்சியாளர்களுக்கு மனம் இல்லையா? உண்மையை பேச வேண்டும்.

பேராயர் எனக்கு எதிராக வாக்களிக்க கூறியதற்கு எனக்கு பிரச்சினை இல்லை. அவ்வாறு அவர் கூறியிருந்தால் மனதிலிருந்த வேதனையினாலேயே அதனை குறிப்பிட்டிருப்பார். கத்தோலிக்க மக்களின் மனங்களில் இன்றும் அந்த வேதனை இருக்கிறது.

ஈஸ்டர் தின தாக்குதல்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய பிரதான சூத்திரதாரிகள் யார் என்ற பிரச்சினைக்கு, உள்நாட்டு விசாரணைகளில் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது என்பதே எனது நிலைப்பாடாகும். இந்த பிரச்சினைக்கு சர்வதேச விசாரணை அவசியமாகும். பேராயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டாம். கத்தோலிக்க மக்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டாம். கத்தோலிக்க சமய தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டாம். ஆட்சியை கைப்பற்றுவதற்கான மனவேதனையே இவர்களுக்கு இருந்தது. இந்த தாக்குதல் சம்பவத்தை இவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்கள். இவர்கள் சகலரும் ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடித்தார்கள். வாக்குகளுக்காக, மேடைக்கு மேடை இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பேசினார்கள். எனவேதான் சர்வதேச விசாரணையை கோருகிறோம். அவ்வாறு சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கு இந்த அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இருக்கிறதா என்பதே எனது கேள்வியாகும் என்றார்.

## கொக்குத்தொடுவாய்...

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி இன்று புதன்கிழமை (06) காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் பகுதிக்கு செவ்வாய்க்கிழமை (06) மாலை விஜயம் மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீபன், தொல்பொருள் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட தரப்பினர் இடத்தை பார்வையிட்டு கலந்துரையாடி இருக்கின்ற வளங்களுடன் இன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ, சீரற்ற காலநிலை காரணமாக செவ்வாய்க்கிழமை(05) ஆரம்பிக்கப்படவிருந்த மனித புதைகுழி அகழ்வு பணியானது இன்று புதன்கிழமை (06) காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என தெரிவித்தார்.

அகழ்வு பணிகள் எவ்வளவு காலம் இடம்பெறும் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு ஏற்கனவே 13 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எப்போது நிறைவடையும் என்பது பற்றி தற்போது கூறமுடியாது. அகழ்வு பணி தொடர்ந்து நடக்கும் பட்சத்தில் எவ்வளவு காலம் நடைபெறும், எத்தனை இருக்கும் என்பது தொடர்பாக கூற முடியும் என மேலும் தெரிவித்தார்.

## சனல் - 4 காணொளி:...

சம்பவத்தை கண்ணீருடன் குறிப்பிட்டவர்கள் அனைவரும் கோட்டபாய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக இருந்தார்கள்.

சனல் - 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ள அவதானம் செலுத்தியுள்ளோம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற அமர்வின்போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 வெளியிட்டுள்ள காணொளி மற்றும் அதன் உள்ளடக்கம் பாரதூரமானது. நாட்டு மக்களை கொன்று இரத்தத்தின் ஊடாக ஒரு தரப்பினர் ஆட்சியை கைப்பற்றியிருந்தால் அது குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த விடயம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்றும் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறியதாவது,

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல்-4 வெளியிட்டுள்ள காணொளி குறித்து ஜனாதிபதி தலைமையில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தினோம்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் தேவையாயின் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் விவகாரம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது.

ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் தான் இவ்வாறான காணொளிகள் வெளியாகின்றன.

கோட்டபாய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அவ்வாறாயின், அதிகாலையில் சென்று கோட்டபாய ராஜபக்ஷவுக்கு வாக்களியுங்கள் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அப்போது குறிப்பிட்டார்.

மறுபுறம், ஒருதரப்பினர் அழுதுகொண்டு ஒரு தரப்புக்கு சார்பாக செயற்பட்டார்கள். ஆகவே இவர்கள் அனைவரும் கோட்டபாய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக செயற்பட்டவர்களாக கருத வேண்டும் என்றார்.

## யாழ்.போதனாவில்...

சம்பவம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை தற்போது கோரப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜீ.விஜேசூரிய கூறினார்.

யாழ்ப்பாணம் - மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமியொருவர் காய்ச்சல் காரணமாக கடந்த மாதம் 25ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிறுமிக்கு ஊசி செலுத்துவதற்காக மறுநாள் கெனியூலா செலுத்தப்பட்டதையடுத்து கை வீக்கமடைந்துள்ளது.

பின்னர் கெனியூலா கழற்றப்பட்ட நிலையில், சிறுமியின் இடது கையின் மணிக்கட்டுக்கு கீழுள்ள பகுதி முழுமையாக செயலிழந்ததால் அதனை அறுவை சிகிச்சைமூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சிறுமியின் இடது கை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டமை தொடர்பில் வைத்தியசாலை மட்டத்திலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைக்கு இரு வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியொருவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அது தொடர்பான மேலதிக நடவடிக்கையை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கமைய யாழ்.தலைமையக பொலிஸ் நிலையத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

வைத்திய பரிசோதனையின் போதா கை அகற்றப்பட்டது அல்லது உண்மையில் என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பரந்துபட்ட அரசியல்...

தொடரின் மற்றுமொரு கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (04) ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கை மக்கள் கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் நாடு எதிர்நோக்கும் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதோடு, எதிர்காலத்தில் எதிர்க்கட்சிகளின் பரந்த அரசியல் கூட்டணியை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அசங்க நவரத்ன, எதிர்காலத்தில் இந்த கலந்துரையாடல்களை நடத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

பரந்துபட்ட கூட்டணியை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு எடுத்த தீர்மானங்களின் பிரகாரம், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான ஒரு பரந்த கூட்டணியில் இணையுமாறு இலங்கை மக்கள் கட்சிக்கு அழைப்பும் விடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் இலங்கை மக்கள் கட்சியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## உண்ணாட்டரசிறை...

அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். இதற்கமைய இன்று (06) பி.ப 4.30 மணி முதல் பி.ப 7.30 வரையும், நாளை (07) பி.ப 4.30 மணி முதல் பி.ப 7.00 மணிவரையும் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படும். இந்த இரு சட்டமூலங்கள் குறித்த இரண்டாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பை வியாழக்கிழமை பி.ப 7.00 மணிக்கு நடத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரு சட்டமூலங்களும் குழுநிலையில் ஆராய்ந்து மூன்றாவது மதிப்பீட்டை பி.ப 7.30 மணிவரை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், இந்த இரு தினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த வாய்மூல விடைக்கான கேள்விகளை பிறிதொரு தினத்துக்கு ஆற்றுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன், சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இந்த இரு தினங்களிலும் மு.ப 9.30 மணிமுதல் பி.ப 4.30 மணிரையும் நடத்துவதற்கும் இணங்கப்பட்டது.

அதேநேரம், முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த விவாதம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு பி.ப 5.30 மணிக்கு அது குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

# போதைப்பொருளை ஒழிப்பதற்கான நிலையம் குறித்து பாராளுமன்ற விசேட குழுவில் ஆராய்வு




போதைப்பொருளை ஒழிப்பதற்கான நிலையத்தை அமைப்பதன் தற்போதைய நிலைமை குறித்து நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் ஆராயப்பட்டது.

குறித்த குழு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் அண்மையில் பாராளுமன்றம் கூடிய சந்தர்ப்பத்திலேயே இது பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

குழுவின் அமர்வுக்கு சுகாதார அமைச்சு, கல்வியமைச்சு, நீதி சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, மீன்பிடித்துறை அமைச்சு, இலங்கை கடற்படை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், இலங்கை சுங்கம், தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு, தபால் திணைக்களம் மற்றும் திறைசேரி ஆகியன அழைக்கப்பட்டிருந்தன. போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு இந்த நிறுவனங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டது.

போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் தலைவர் வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா குழுவில் கருத்துத் தெரிவிக்கையில், போதைப் பொருளை அழிப்பதற்கான நிலையமொன்று கற்பிட்டி பிரதேசத்தில் அமைக்கப்படுவதாகவும், இதற்கான நீர், மின்சாரம் மற்றும் பாதைக் கட்டமைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தக் குழு தலையிடுமாயின் இந்த வருட இறுதிக்குள் குறித்த நிலையத்தை அமைக்க முடியும் என்றார். இந்தக் கோரிக்கைக்கு அமைய இவ்விடயத்தில் உரிய தலையீட்டை மேற்கொள்வதாக குழுவின் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

அத்துடன், இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கைகள் காலதாமதம் அடைவது தொடர்பில் இங்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர். பகுப்பாய்வு அறிக்கையை வழங்குவதற்கு முன்னர் 09 மாத காலங்கள் சென்றதாகவும் தற்பொழுது 03 மாதங்கள் மாத்திரமே செல்வதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அதிகாரிகளுக்குக் காணப்படும் பற்றாக்குறை இதற்குக் காரணம் என்றும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், ஈசி காஷ் (ez cash) ஊடாக மேற்கொள்ளப்படும் நிதி கொடுக்கல் வாங்கல்கள்மூலம் போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாகவும் இது தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்தும் பணியில் சுதேச மருத்துவ அமைச்சின் ஆதரவைப் பெறுமாறு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும், தபால்மூலம் போதைப்பொருள் விநியோகம் இடம்பெறுவதைத் தடுப்பது, பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் போதைப்பொருள் பரவலைக் கட்டுப்படுத்தல், கடல் வழியாக போதைப்பொருள் நாட்டுக்குள் கொண்டுவருவதைத் தடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் இந்தக் குழுவில் இணைந்துகொண்டதுடன், போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவது தேசிய பாதுகாப்போடு நேரடியாக தொடர்புடையது எனவும் இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர்களான சட்டத்தரணி சிசிர ஜயகொடி, வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான புத்திக பத்திரண, ஜயந்த சமரவீர, வைத்திய கலாநிதி உபுல் கலப்பதி, மேஜர் சுதர்ஷன தெனிப்பிட்டிய, உபுல் மகேந்திர ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதியை கொல்ல...

ஸ்ரீ சித்தார்த்தா தேசிய பாடசாலையின் 150ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளவிருந்த ஜனாதிபதியை கொலை செய்ய சினைப்பர் தாக்குதல் நடத்துவதற்கு வீரர் தேவை என பேஸ்புக்கில் பதிவிட்ட 19 வயதான இளைஞரை புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர். எப்பாவல மடியாவ பகுதியை சேர்ந்த 19 வயது இளைஞரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். இச்சந்தேக நபர், கணினி மற்றும் கைத்தொலைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையாகி விளையாடி வருவது விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இறக்குமதி மீதான...

தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிகள் மீதான சகல கட்டுப்பாடுகளையும் 2023ஆம் ஆண்டு இறுதியில் நீக்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக நிதி அமைச்சின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக கோதுமை மா மற்றும் தரை ஓடுகளை நிர்வகிப்பதில் இத்தகைய கட்டுப்பாடுகள் ஏற்படுத்திய இரட்டைக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய கட்டுப்பாடுகள் எவ்வளவு காலம் இருக்கும் என குழு வினவியபோதே அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் நேற்று (05) கூடியபோதே இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341 / 38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குழுவில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைக்கும் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையிலான அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய, முதல்தடவையாகப் புலம்பெயர் கொடுப்பனவைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவு 30,000 அமெரிக்க டொலரிலிருந்து ஆகக் கூடியது 50,000 அமெரிக்க டொலராக அல்லது அதற்கு சமமான தொகைக்கு அதிகரிக்கப்படுகிறது.

அத்துடன், சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு (திருத்த) சட்டமூலமும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் ஆராயப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

இதற்கமைய, 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தித் தீர்வை பொருந்தும் ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பாக வரிக்கட்டமைப்பை இலகுபடுத்த அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வையை ஒரு கூட்டு வரியாகக் கருத்தில் கொண்டு இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்கள் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டு அத்தகைய நபர்களின் வரிச்சுமையைக் குறைப்பது, வெட்டப்பட்டு மெருகூட்டப்பட்ட பின்னர் மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற கரடுமுரடான சீர்செய்யப்படாத மாணிக்கக் கற்கள், வரிச்சுமையைக் குறைப்பதன் மூலம் உலக சந்தையில் அத்தகைய இலங்கை வணிகத்தின் போட்டித் தன்மையைப் பேணுவது, தீர்வையற்ற விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருட்கள் குறித்தும் இந்தத் திருத்தத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதும், மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதிகள் இல்லாதபோது, வரிச்சுமையைக் குறைக்க மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்களிலிருந்து விலக்களிப்பதன் நோக்கம், செயல்திறன் மற்றும் தாக்கம் குறித்து அதிகாரிகளிடம் குழு கேள்வியெழுப்பியிருந்தது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் (கலாநிதி) சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, வஜிர அபேவர்தன, பாட்டலி சம்பிக்க ரணவக, நிமல் லான்சா, இசுறு தொடங்கொட, (கலாநிதி) மேஜர் பிரதீப் உதுகொட, (கலாநிதி) நாலக கொடஹேவா, மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## 166, 938 பேர் பல்கலை...

04 ஆயிரத்து 198 பேரும் கலைப் பிரிவில் 03ஆயிரத்து 622 பேரும் பொறியியல் தொழில்நுட்பத் துறையில் 90 பேரும் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் 73 பேரும் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 36 பேரும் இவ்வாறு மூன்று பாடங்களிலும் 3 ஏ சித்திகளை பெற்றுள்ளனர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் 2 இலட்சத்து 63ஆயிரத்து 933 விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் 84 பேரின் பெறுபேறுகள் பல்வேறு காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் (04) வெளியான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய இம்முறை ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 938 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் 149,487 பேர் பாடசாலை விண்ணப்பதாரர்கள், மீதமுள்ள 17,451 பேர் தனியார் விண்ணப்பதாரர்கள்.

அதற்கமைய 63.3 வீதமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, பரீட்சைக்கு தோற்றிய 96 ஆயிரத்து 995 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறவில்லை என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இம்முறை வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய, உயிரியல் பாடத்தில் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரமோதி முனசிங்க முதலிடத்தை பெற்றுள்ளார்.

பௌதீக விஞ்ஞான பாடப்பிரிவில் கொழும்பு ரோயல் கல்லூரியைச் சேர்ந்த மனேத் பானுல பெரேரா முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த காவிதினி தில்சராணி தருஷிகா முதலிடம் பெற்றார்.

பொறியியல் தொழில்நுட்பத்தில் காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த சமுதித நயனப்ரியா முதலிடம் பெற்றார். தகவல் தொழில்நுட்ப பிரிவில் தேவி பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ருவினி அஹின்சா விக்ரமரத்ன முதலிடம் பெற்றார்.

## பிரமிட் திட்ட...

ஹம்பாந்தோட்டை மற்றும் கடவத்தை ஆகிய நான்கு காணி பதிவாளர்களுக்கே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய பணிப்பாளரின் முழு சொத்து மதிப்பு 62 கோடிக்கும் அதிகம் என்பதுடன், அந்த சொத்துகள் சட்டவிரோதமான முறையில் பிரமிட் திட்டத்தில் சம்பாதித்த பணத்தில் வாங்கப்பட்டவை என தெரியவந்துள்ளது.

இந்த சொத்துகளை மாற்றவோ அல்லது விற்கவோ தடை விதிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி மற்றும் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திடம் கோரியதையடுத்து, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

மேலும் 'ஒன்மெக்ஸ் டீரி' தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் சம்பத் சந்தருவனின் 62 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 20 சொத்துகளுள் அதிசொகுசு ஹோட்டல் மற்றும் பல சொகுசு வீடுகளும் உள்ளன என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அதன்படி மாத்தறை பிரதேசத்திலுள்ள சொகுசு வீடு மற்றும் சொகுசு ஹோட்டலுடன் கூடிய 06 காணிகள், ஹம்பாந்தோட்டையிலுள்ள 02 காணிகள், கடவத்தையிலுள்ள 10 காணிகளும் இவ்வாறு மாற்றுவதற்கும் விற்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

சம்பத் சந்தருவன் தனது 20 சொத்துகளையும் ஒரே நாளில் தனது மனைவி மற்றும் உறவினர்களுக்கு மாற்றிக் கொடுத்து மோசடியை மறைக்க முயன்றதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றில் பத்து பேர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி இரண்டு முறைப்பாட்டாளர் களிடமிருந்து 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

## கற்பிட்டியில்...

2ஆயிரத்து 100 கடல் சங்குகள் கைப்பற்றியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் பயணத்தை தொடங்கும் முன் கற்பிட்டி நகரில் நேற்று பஸ்ஸை சோதனையிட்ட பொலிஸார் பஸ்ஸின் பின்புற டிக்கியில் இருந்து 07 உரைப் பைகளில் இருந்து 2ஆயிரத்து100 கடல் சங்குகள் மீட்கப்பட்டுள்ளன. எனினும் குறித்த கடல் சங்குகளை பஸ்ஸில் ஏற்றிச் சென்றது யார் என இதுவரை தெரியவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உடல் உறுப்புகளால்...

விஹகனா உயர்தர பெறுபேறுகள் அடிப்படையில் குருநாகல் மாவட்டத்தில் 176ஆவது இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 2,256ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

அவரின் இந்த பெறுபேறு அப்பகுதியிலுள்ள அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அம்பன்பொல நகரில் வசிக்கும் மூன்று பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் கடைசி பிள்ளையான விஹகனா, க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நிலையில் உயர்தரத்தில் வணிகப் பிரிவை ஆங்கில மொழியில் கற்பதற்காக குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் சேர்ந்தார். கடந்த 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு முழுமையாக தோற்றியிருந்தார்.

பரீட்சைகள் முடிவடைந்திருந்த நிலையில் விஹகனாவுக்கு திடீர் தலைவலி மற்றும் வாந்தி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் கல்கமுவ மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த விஹகனாவின் உடல்நிலை மிகவும் மோசமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட விஹகனா சுயநினைவு திரும்பாதநிலையில் உயிரிழந்தார்.

இவ்வாறு மூளைச்சாவடைந்து உயிரிழந்த விஹகனாவின் இதயம் மற்றும் நுரையீரல் ஆகியன உடல் உபாதையால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த மயக்க மருந்து நிபுணர் ஒருவருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று விஹகனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு சிறுநீரகங்களும் மேலும் இருவருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று குருநாகல் போதனா வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவில் சிகிச்சைப்பெற்றுவந்த நோயாளியொருவருக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று விஹகனாவிடமிருந்து பெறப்பட்ட கல்லீரல் மற்றும் கண் வில்லைகள் மேலும் மூன்று பேருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த எழுவருக்கு வாழ்வளித்து தம் உயிர்நீத்த விஹகனா ஆரியசிங்கவின் உயர்தர பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அவரின் பெறுபேற்றை கொண்டாட வேண்டியவர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

## உள்நாட்டு...

அரசியலமைப்பின் 121 (1) யாப்பின் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "உண்ணாட்டரசிறை (திருத்தம்)" எனும் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானம் தனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடுகள் எதுவும் அரசியலமைப்பின் 12ஆவது யாப்பு அல்லது அரசியலமைப்பின் ஏனைய ஏற்பாடுகளுக்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதற்கமைய, இந்த சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையில் சட்டரீதியாக நிறைவேற்ற முடியும் என அறிவித்தார்.

### குழு உறுப்பினர்களின் மாற்றங்கள் சபாநாயகர் விசேட அறிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்களான (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார, எஸ்.பீ.திசாநாயக்க மற்றும் தம்மிக்க பெரேரா பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினை தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து இராஜினாமா செய்தமையினால் அக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான நிமல் லான்சா, நாலக பண்டார கோட்டேகொட மற்றும் திருமதி மஞ்சுளா திசாநாயக அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 01ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை சபாநாயகர் அறிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிலிருந்து இராஜினாமா செய்தமையினால் அக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 01ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் சபாநாயகர் அறிவித்தார்.

ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தும் விடயங்கள்,

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரியவால் 2023 ஜூலை 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம் என சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற சபை முதல்வர் சட்டத்தரணி கலாநிதி சுசில் பிரேமஜயந்தவால் 2023 ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம் எனவும் சபாநாயகர் அறிவித்தார்.

# கரம்பை சோதனைச் சாவடியில் 660 கிலோ பீடி இலைகளுடன் சந்தேக நபரொருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் கரம்பை பகுதியிலுள்ள வீதி சோதனைச் சாவடியில் லொறியொன்றை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அதிலிருந்து 660 கிலோ 500 கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் நேற்று (05) கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேகத்தின் பேரில் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் கரம்பை சந்தியில் உள்ள வீதிச் சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

இதன்போது, கடற்படையினரும், நுரைச்சோலை பொலிஸாரும் இணைந்து அவ்வீதியூடாகப் பயணித்த சொகுசு லொறியொன்றை பரிசோதனை செய்தபோதே இவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த லொறியில் மேற்படி பீடி இலைகள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில், அதனை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலைகளை ஏற்றிக்கொண்டு கற்பிட்டியிலிருந்து குருநாகல் பகுதியை நோக்கி இந்த லொறி பயணித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என



கடற்படையினர் குறிப்பிட்டனர்.

24 உரப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் கூறினர்.

மேலும், லொறியில் பயணித்த சந்தேக நபரும்,பீடி இலைகளைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் லொறியும், பீடி இலைகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர்.

# உயர்தர மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கல்வியமைச்சு மீது குற்றச்சாட்டு



அதிக எதிர்பார்ப்புகளுடனேயே மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். 2023 ஆம் ஆண்டு உயர்தரத்திற்கு தோற்றும் பிள்ளைகள் கடுமையான அநீதியை எதிர்கொண்டுள்ளனர். இவர்கள் 2020 ஆம் ஆண்டு பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றினாலும் தாமதமாகவே பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, உயர் பணவீக்கம், எரிபொருள், மின்சார நெருக்கடி போன்ற பிரச்சினைகளினால் அவர்கள் பாதிக்கப்பட்டனர். இதன் காரணமாக, கற்கைக் காலம் குறைவடைந்துள்ளது. இந்நிலையில், தங்கள் வசதிக்காக, உயர்தரப் பரீட்சையை முன்கூட்டியே நடத்த கல்வி அதிகாரிகள் முடிவு செய்தனர். அதன் காரணமாக மாணவர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (05) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் உயர்தர மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இம்மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும். 6 தவணைப் பரீட்சைகள் முடிந்திருக்க வேண்டும். என்றாலும், இதுவரை 4 தவணைப் பரீட்சைகளே முடிந்துள்ளன. இதன் காரணமாக பாடத்திட்டம் கூட முழுமையடையாதுள்ளது. இது பாரிய அநீதி. இது பாடசாலை மாணவர்களின் உரிமை மீறலாகும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கும் இதனால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இதெல்லாம் மாணவர்களின் தவறல்ல. கல்வி அமைச்சின் திறமையின்மையே காரணம். மதிப்பெண்களை சரிபார்க்கும் செயற்பாடுகள் முறையாக இடம்பெற்றிருந்தால் இவ்வாறானதொன்று நடந்திருக்காது - என்றார்.

# கடற்றொழில் துறையில் முதலீடுசெய்ய சீன முதலீட்டாளர்கள் இணக்கம்

பு.கஜிந்தன்

சீன முதலீட்டாளர்கள் குழுவினருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுககுமிடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது, கடற்றொழில் துறையில் முதலீடுகளைச் செய்வதற்கும் தமது படகுகள் மூலம் பிடிக்கும் மீன்களை தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு விரும்புவதாகவும் சீன முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கான அனுமதிகளை கடற்றொழில் அமைச்சு வழங்குமாக இருந்தால் இத்துறையில் பாரிய முதலீடுகளைச் செய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தமது திட்டவரைபை தமக்கு கிடைக்கச்செய்தால் அது தொடர்பில் ஆராய்ந்து



பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த மற்றும் அமைச்சின் செயலாளர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# நுண்கடனால் பெண்ணொருவர் தற்கொலை

பு.கஜிந்தன்

நுண்கடனுக்கு பணம் பெற்று நெருக்கடிக்குள்ளான இளம் குடும்பப் பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இச்சம்பவமானது நேற்று முன்தினம் (04) யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டுமடம் - யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த ஜெயராசா அருள்பாலினி (வயது 34) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் நுண்கடன் பெற்றுள்ளார். இந்நிலையில், கடனுக்கான வட்டி அதிகரித்தமையினால், வட்டிக்குப் பணம் கொடுத்த தரப்பினரால் வீடு, லொறி, வாகனம், மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், மிகுதி வட்டிப்பணம் செலுத்தாததன் காரணமாக நுண்கடனாகப் பணத்தைக் கொடுத்தவர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில், தன்னால் இனி உயிர்வாழ முடியாது என்றும் உயிரை மாய்க்கப் போவதாகவும் கணவனிடம் கூறியுள்ளார். அதற்கு கணவன், பத்து மாதக் கைக்குழந்தை உள்ளது. எனவே, இவ்வாறு தவறான முடிவெடுக்க வேண்டாம் எனக்கூறிவிட்டு கோவிலுக்குச் சென்றுள்ளார்.

கோவிலில் இருந்து நேற்று மதியம் வீடு திரும்பியபோது வீடு பூட்டப்பட்டிருந்தது. வீட்டுக்குள் சென்றபோது தனது மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் இருந்துள்ளார். தூக்கில் தொங்கும் தனது தாயின் கால்களுக்கருகில் பிடித்தவாறு 10 மாதக் குழந்தை அழுதவாறு இருந்துள்ளது. இது தொடர்பில், பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 20 ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** குடும்பத்தில் சுபகாரியங்களுக்காக செலவுகளைச் செய்வீர்கள். மன மகிழ்ச்சி உண்டு.

**ரிஷபம்:** நல்ல உணவு, உறக்கம் அமையும். பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** ஆணவத்தால் பல தொல்லைகளை அனுபவிப்பீர்கள். பயணங்களின் போது கவனம் வேண்டும்.

**கடகம்:** பொருள், தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் லாபமும் உண்டு.

**சிம்மம்:** தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். நண்பர்கள் மூலம்உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும்.கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**துலாம்:** உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தன, பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும்.

**விருச்சிகம்:** வாகனத்தால் நன்மையும், மனைவி மூலம் லாபங்களும் உண்டு. கௌரவமாக நடத்தப்படுவீர்கள்.

**தனுசு:** பகைவர்கள் விலகிச் செல்வார்கள். கேட்ட பணம் இன்று கிடைக்கும்.

**மகரம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாய்ப்பு உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி.

**கும்பம்:** வாழ்க்கை முன்னேற்ற வேலைகளை இன்று ஆரம்பிப்பீர்கள்.கணவன் - மனைவி அன்யோன்யமாக இருப்பார்கள்.

**மீனம்:** பண வருவாய்க்கு குறை இருக்காது. எதையும் துணிவுடன் செய்து முடிப்பீர்கள்.

**திதி:**சப்தமி பி.ப.3.38 வரை பின் அஷ்டமி
**நட்சத்திரம்:**கார்த்திகை மு.ப.9.20 வரை பின் ரோஹிணி
**யோகம்:**அமிர்தசித்த யோகம் மு.ப.9.20 வரை பின் சித்தயோகம்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**மு.ப. 9.03 – 10.03 மணி வரை
**ராகு காலம்:**12.03 – 1.33 மணி வரை
**எமகண்டம் :**7.33 – 9.03 மணி வரை
**குளிகை :**10.33 – 12.03 மணி வரை
**சந்திராஷ்டமம்:**துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்
**தன அதிஷ்டம்:** பரணி,பூரம்,பூராடம், கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** கிருஷ்ண ஜெயந்தி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சி தீவிர கவனம்

ஐக்கிய மக்கள் சக்தியால் எதிர்காலத்தில் கட்டியெழுப்பவுள்ள பரந்துபட்ட அரசியல் கூட்டணிக்கு ஆதரவைப் பெறும் நோக்கில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் அரசியல் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை தொடரின் மற்றுமொரு கலந்துரையாடல் நேற்று முன்தினம் (04) ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கை மக்கள் கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன உள்ளிட்ட அக்கட்சியின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்துகொண்டனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் நாடு எதிர்நோக்கும் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதோடு, எதிர்காலத்தில் எதிர்க்கட்சிகளின் பரந்த அரசியல் கூட்டணியை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அசங்க நவரத்ன, எதிர்காலத்தில் இந்தக் கலந்துரையாடல்களை நடத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

பரந்துபட்ட கூட்டணியை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு எடுத்த தீர்மானங்களின் பிரகாரம், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் இவ்வாறான ஒரு பரந்த கூட்டணியில் இணையுமாறு இலங்கை மக்கள் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் இலங்கை மக்கள் கட்சியின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம் நிகழ்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் த.இராஜரட்னம் தலைமையில் மாலை 6.00 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில், "தமிழின் முதலாவது வரலாற்று நாவல் 'மோகனாங்கி' என்னும் தலைப்பில் தகவல் தொழில்நுட்பவியலாளர் மு.மயூரன் வாசிப்பனுபவப் பகிர்வு நிகழ்த்தவுள்ளார்.

# ஆபிரிக்க காலநிலை மாநாட்டில் ருவன் விஜேவர்தன பங்கேற்பு

## எகிப்து பிரதமருடனும் சந்திப்பு



கென்யாவின் நைரோப் நகரத்தில் நடைபெற்றுவரும் ஆபிரிக்க காலநிலை தொடர்பான மாநாட்டில் (Africa Climate Summit 2023) பங்கேற்கச் சென்றிருக்கும் ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, எகிப்து பிரதமர் முஸ்தபா மெட்பௌலியைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய ருவன் விஜேவர்தன குறித்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்.

எகிப்து பிரதமர் மற்றும் ருவன் விஜேவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பது தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புகளை மேம்படுத்திக்கொள்ளும் இயலுமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதேபோல், காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பிலும் எகிப்து ஜனாதிபதிக்கு ருவன் விஜேவர்தன தெளிவுபடுத்தினார்.

மேலும் இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. கென்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கனா கனநாதனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளார்.

# தமிழ்த்தாசனின் "பண்பாடுகள் படும்பாடுகள்" நூல் வெளியீட்டு விழா ஞாயிறன்று

சாவகச்சேரி நிருபர்

எழுத்தாளர் மிருசுவில் தமிழ்த்தாசனின் "பண்பாடுகள் படும்பாடுகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு சாவகச்சேரி வடக்கு திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில், பிரதம விருந்தினராக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி சி.சுதோக்குமாரும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை மருத்துவர் அருளானந்தம்,குகன் ஸ்ரூடியோ அதிபர் வ.ஸ்ரீபிரகாஸ் மற்றும் திருப்புகழ் மண்டப உரிமையாளர் யோ.செந்திமயூரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் சக்கடத்தார் என்ற நகைச்சுவை சிறப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலி. வடக்கு மக்களுக்கான காணிகள் பகிர்ந்தளிப்பு





வலி. வடக்கு அன்ரனிபுரத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட அரச காணிகள் பொதுமக்களுக்கு நேற்று (05) பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, நீண்ட காலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற வலி. வடக்கை பூர்வீகமாகக் கொண்ட சுமார் 49 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை பரப்பு வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறித்த பிரதேசம் உயர் பாதுகாப்பு பிரதேசமாக இருந்து வந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் கடந்த பெப்ரவரி மாதமளவில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், விடுவிக்கப்பட்ட அரச காணிகளை முகாம்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குலுக்கல் முறையில் காணிகளைத் தெரிவு செய்து பயனாளர்களுக்கு வழங்கிவைத்த இன்றைய நிகழ்வில், வலி. வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் செல்வி சாந்தாதேவி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன்(தோழர் ஜீவன்) மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 06ஆம் திகதி, புதன்கிழமை

# சனல் 4 இன் குற்றச்சாட்டுகளை ஆராய்வது கட்டாய தேவை!

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என இங்கிலாந்தின் செனல் - 4 தொலைக்காட்சியில் வெளியான தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜபக்ஷர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக இராணுவ உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சலே மற்றும் இஸ்லாமிய அரசுடன் இணைந்த நபர்களுடன் ஒரு சதித்திட்டம் தீட்டுவதற்காக 2018 இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றதாகவும் அந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு இடம்பெற்று முடிந்த கையோடு சுரேஷ் சலே என்னிடம் வந்து ராஜபக்ஷக்களுக்குத் தேவை, இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல். அப்போது தான் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி" - எனக் கூறியதாக அன்ஸிர் ஆசாத் மௌலானா சனல் 4 விடம் தெரிவித்துள்ளார்.

தற்போது புகலிடம் கோரி சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் வசிக்கும், கிழக்கு மாகாண இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானாவே இதில் முக்கிய பாத்திரம் வகிப்பது பகிரங்கமாகியுள்ளது.

"தாக்குதல் திட்டம் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல, இது இரண்டு - மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சலே இராணுவப் புலனாய்வுத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார் என்றும் மௌலானா தெரிவித்துள்ளார். அரசாங்கத்திற்குள் உள்ள அதிகாரிகளே தாக்குதல்களுக்கு உடந்தையாக இருந்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவங்கள் தொடர்பில் ஆசாத் மௌலானா, தனது பெயரைப் பயன்படுத்தியுள்ள காலத்தில், தாம் இலங்கையில் கடமையாற்றவில்லை என்பதை மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் செனல்-4 க்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வெளிவந்துள்ள தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகளை நடத்தவேண்டுமென எதிர்க்கட்சி நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளது.

அதேபோல இதுபற்றி விசாரணைகள் நடத்தப்படுமென அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் அறிவித்திருக்கிறார். மக்களின் எதிர்பார்ப்பும் இதுவே.

சஹ்ரான் ஹாசீம் தலைமையிலான குழு ஈஸ்ரர் தினமொன்றில் நடத்திய தொடர் தாக்குதல் சம்பவங்களின் மர்மம் இன்னமும் நீடிக்கிறது. அந்தச் சம்பவங்களின் பின்னர் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட விரிசலும் - சந்தேகப்பார்வையும் இன்னமும் தொடர்கிறது. இந்த நிலைமையில், இப்போது வெளிவந்திருக்கும் தகவல்கள் தொடர்பில் கவனிக்கப்படவேண்டியது அவசியமும் - கட்டாயமுமானதாகும். இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் கட்சியில் பேச்சாளரான ஆசாத் மௌலானா சுவிற்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோருவதற்காக இப்படியான தகவல்களை வெளியிட்டாரெனக் கூறப்பட்டாலும் நெருப்பில்லாமல் புகையுமா என்ற சந்தேகங்களும் இல்லாமலில்லை.

சனல் 4 தொலைக்காட்சியின் தகவல்களை அடிப்படையாக வைத்துப்பார்த்தால், சாதாரண அரசியல் நோக்கங்களுக்காக அந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் அது மிகப்பெரும் தேசத் துரோகமாகும்.வெறுமனே இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவர் மீது விரல் நீட்டிவிட்டு அமைதியாக இருந்துவிடுவதா? அவருக்கு ஆலோசனைகள் வழங்கிய அரசியல் தலைமை யார் என்பது கண்டறியப்படுதல் வேண்டாமா? அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்குத் தான் அத்தனை உயிர்கள் காவுகொடுக்கப்பட்டதாயின் அது மரணதண்டக்குரிய குற்றமல்லவா?

மதத்தின் பெயரால் அது செய்யப்பட்டதால் இற்றைவரை இங்குள்ள இஸ்லாமிய சகோதரர்கள் படும் வேதனை கொஞ்சநஞ்சமல்ல. இஸ்லாத்தின் நன்னெறிகளை அவர்கள் யாருக்காவது விளக்கிக் கூறினால்கூட அது இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் பேசுவது போன்ற உணர்வைக் கொடுக்கிறதென்றால் அதற்கு காரணம், இந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தான்.அதனால்தான் வேறு எவரையும் விட இந்த விடயத்தில் உண்மையைக் கண்டறிய கோரிக்கை விடுத்து வருகின்றனர் முஸ்லிம் அரசியல்வாதிகள். அதில் நியாயம் இருக்கிறது. ஈஸ்ரர் தின தாக்குதலையும் இஸ்லாத்தையும் முடிச்சுப்போடாமல் அதன் பின்னணியில் இருக்கும் அரசியலை நோக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கூறியிருந்தார். எனவே,சனல் 4 தொலைக்காட்சியில் கூறப்பட்ட விடயங்களில் உண்மைத்தன்மை ஆராயப்படவேண்டுமென பொறுப்பான ஊடகம் என்ற ரீதியில் வலியுறுத்த விரும்புகிறோம். அதுவே தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமன்றி, தாக்குதலால் விமர்சனங்களுக்கு உள்ளான சமூகங்களுக்கு ஆறுதலைத் தரும்.



# சொல்லாளர்களின் விழாவாகும் சொற்கோவின் பொன் விழா

"சொல்வனவற்றை ஆய்ந்து - அறிந்து சரியாக வழங்குதல் என்பது ஊடகத்தின் கற்புநெறி; அதன் விளைவான நம்பிக்கையே வானொலியும் தொலைக்காட்சியும் பத்திரிகையும்"- பேரா. சிவத்தம்பி

"கொம்யூனிஸ்" என்ற இலத்தீன் சொல்லை அடியாகக் கொண்டு பிறந்ததே "கொம்யூனிகேஷன்".

"கொம்யூனிஸ்'' என்பதற்கு பொதுவாகக் கதை சொல்லுதல்; அவற்றைப் பகிர்தல்; அது கடத்தப்படுதல்; பரப்புதல் - என்பன பொருளாகும்.

"கொம்யூன்" என்பதை குழு நிலை என்று எமக்கு சமூகக் கல்வி கற்பித்த சட்டத்தரணியும் மூத்த ஊடகருமான மகாலிங்கம் மாஸ்டர் சொல்வார். அவர் ஒரு கொம்யூனிஸ்ட் என்பதால் இப்படியான விடயங்களை இடைக்கிடையே வகுப்பில் சொல்வதுண்டு.

நியூசிலாந்தில் என்னுடன் கற்ற சீன மாணவர்கள் தாம் ஒன்றாகக் கற்பதை "கொம்யூன்"என்பர். ஒருவரோடு ஒருவர் பகிர்வதன் மூலம் வந்ததே கொம்யூன்.இன்றைக்கும் "வாட்ஸ் அப்" போன்ற சமூக ஊடகங்கள் மூலம் குழு நிலைகள் சமூகத்தில் தோன்றுவதை நாம் காண்கிறோம். "கொம்யூனிகேஷனை பல பொருள் கொண்ட ஒரு சொல்'' என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

Communication:- The process of giving information or of making emotions or idea known to someone (Makmillan English Dictionary P-277)

எனவே, பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்ற யாவற்றுக்கும் இந்தச் சொல் தான் அடிப்படை. இந்தச் சொல்லை இந்த மூன்று ஊடகங்களும் எப்படிப் பயன்படுத்துகின்றன என்பதிலேயே அவற்றின் தனித்துவம் மிளிர்கிறது.

எனது இதழியற் கற்கைநெறியின்போது நான் அதில் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைக்கு எடுத்துக்கொண்ட விடயம் "செய்திகளில் முதற் பந்தி" என்பதாகும்

நான் இதழியல் தொலைக்காட்சி ஊடகங்களில் பணியாற்றிய போதிலும் இதனைப் பற்றிய விபரங்களை மேலும் அறிவதற்கு நான் அணுகிய மூவர் அமரர் நடராஜா ( வீரகேசரி ), அமரர் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம், மதி அண்ணா ஆகியோராவர். ஒரு பத்திரிகை ஆசிரியர், ஒரு தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்பாளர் , ஒரு வானொலிச் செய்தித் தயாரிப்பாளர் அல்லது வானொலிச் செய்தி அறிவிப்பாளர் என்ற வகையில் அதனை உருவாக்கினேன்.

நடா அண்ணர் நிருபராக இல்லாத போதிலும், ஆசிரியர் என்ற அனுபவத்தில் பத்திரிகையில் முதற் பந்திகள் பற்றிய அனுபவம் கொண்டவர். சில்வெஸ்டர் ரூபவாஹினி செய்திப் பிரிவில் இடையிடையே செய்தி சேகரிக்கப் போய் வந்துள்ளதுடன் ஆங்கில, தமிழ் செய்திகளைத் தயாரித்தவர். மதியழகன் அண்ணர் மத்தியானம் இலங்கை வானொலியில் செய்தியை வாசித்துவிட்டு வந்து பின்னேரம் மூன்றுமணிக்கு ரூபவாஹினிக்கு வந்து செய்தி ஆசிரியர்களுடன் கூட இருந்து அவற்றை வாசிப்பதற்கு ஆயத்தப்படுத்தி மாலை ஆறு முப்பதுக்கு கலையகத்திலிருந்து நேரடியாக வாசித்தவர். இந்த ஒவ்வொரு ஊடகங்களிலும் முதற் பந்திகள் வித்தியாசமானவை. ஏன் , ஒவ்வொரு பத்திரிகைகளிலும் ஒரே செய்திக்கான முதற் பந்திகள் வேறுபட்ட நாட்களும் ஒரு காலத்தில் இருந்தன. இன்று தொடங்கி முடியும் வரை ஒரே செய்திகள் சிலவேளை ஒரே தலையங்கத்துடன் ஊடகங்களில் வருவதைக் காணும் நிலையிலேயே ஊடகத்துறை உள்ளது. முதற்பந்தியா?அது என்ன என்று இன்றைய இளம் ஊடகர்கள் கேட்கலாம்.

மதியழகன் அண்ணர் தமது அனுபவத்தின் அடிப்படையில் சில நிமிட நேரங்கள் வானொலியின் முதற்பந்தி பற்றிச் சுவையாகவும் சில தமிழ் மொழிபெயர்ப்புச் செய்தி ஆசிரியர்களின் மொழிபெயர்ப்பு உத்தியையும் ரூபவாஹினி "லொபியில்'' வைத்தே தமது நகைச்சுவைப்பாணியில் சொன்ன நினைவு வருகிறது.

சொற்கள் தான் ஊடகங்களின் அடிப்படையாகும். அவை இன்றேல் ஊடகங்கள், ஊடகர்கள் , ஊடக மன்றங்கள் என்று எதுவுமே இல்லை.

இன்று இலங்கைத் தமிழ் ஊடகர் ஒன்றியம் இந்த மூன்று ஊடகங்களிலும் பணியாற்றி, அரை நூற்றாண்டு காலம் சொற்களை ஆண்டு வந்த மதியழகனுக்கு விழா எடுக்கின்றது.

சொற்கள் தான் கருத்தாடல்களினதும் பகிர்வினதும் அடிப்படை . சொற்களில் நம்பிக்கையை உருவாக்குபவனே ஊடகன். அரச தொலைக்காட்சிகளில் வெளிவரும் சொற்களில் எல்லாம் மக்களுக்கு நம்பிக்கை இல்லாத போதிலும், சமூக வாழ்வியலில் இணைந்த பல விடயங்களில் தமிழ்ச் சமூகம் வானொலியை நம்பிய காலம் நிறைய உண்டு.

"யாழ்தேவி எத்தனை மணிக்கு வரும் ?" - என ரேடியோ சிலோனை ஒருமுறை யாரோ கேட்ட கதை பற்றிச் சொல்லப்படுவதுண்டு. .

மரண அறிவித்தல்களில் வரும் சொற்களால் ஏற்பட்ட குழப்பங்கள் பற்றிப் பேசப்படுவதுண்டு .

முழுக்கமுழுக்கத் தமிழிலேயே மரண அறிவித்தற் சொற்கள் பாவிக்கப்படவேண்டும் என்று பணிப்பாளர் பணிக்க -மரண அறிவித்தலில் வந்த பெயர் ஒன்றின் பின்னால் அடைப்புக்குறிக்குள்ளிருந்த "லோயரம்மா'' என்ற சொல்லை அறிவிப்பாளர் "வழக்கறிஞர்'' என்று மாற்றி, உண்மையில் அது அந்த நபரின் ஊர்ச் செல்லப்பெயர் என்று அறியப்பட்டபோது ஏற்பட்ட குழப்பம் பற்றிப் பேசப்படுவதுண்டு.

ராஜா என்ற திரைப்படத்தின் விளம்பரத்தை அறிவித்த அறிவிப்பாளர் தமது பெயரும் அதுவாக இருந்ததால் அந்த விளம்பர நிகழ்ச்சியை சுவைபடச் செய்த கதையுமுண்டு.

அனுமதி மறுக்கப்பட்டது என்பதனை அனுமதி அளிக்கப்பட்டது என்று வாசித்து சிக்கலில் மாட்டிய அறிவிப்பாளரும் உண்டு.

வானொலியில் அறிவிக்கப்படும் மரண அறிவித்தலில் வழங்கப்படும் சொற்களின் மூலம் தகவல் வழங்கப்பட்டதான கதையும் உண்டு.

சொற்கள் எவ்வளவு வலிமை வாய்ந்தவை என்பதை மேற்குறிப்பிட்ட சில சம்பவங்கள் காட்டும்.

அந்தப் பெருமைக்குரிய ஊடகமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வழியாக வந்தவர்களின் பணியில் சிறப்படைந்ததே இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம். அங்கிருந்து பெற்றவற்றை நாம் எமக்கு அடுத்து வந்தவர்களிடம் அதாவது, என்னிடம் பயின்றவர்களுக்கு நான் கடத்தினேன். அது இன்னும் தொடருதா இல்லையா என்பது கேள்விக்குறியே!

நாங்கள் ஊடகங்களைக் கேட்கவும் வாசிக்கவும் தொடங்கிய நாட்களில் சொற்களை நேசித்தவர்கள் பலர் ஊடகங்களைக் கையாண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஊடக ஜாம்பவான்களான அமரர்கள் சிவநாயகம், இரத்தினம், இரத்தினசிங்கம், கானமயில்நாதன் போன்றவர்களுடன் பணியாற்றி அந்த அனுபவத்துடன் ஒலிபரப்புக் கூடத்தில் இணைந்தவர் என்ற பெருமைக்குரியவர் எங்கள் நாயகர் மதியழகன்.

தமது ஐம்பது ஆண்டுகால ஊடகப்பணியில் சொற்களை இதழ் ஊடகத்தில், ஒலி ஊடகத்தில், ஒளி ஊடகத்தில் எப்படிக் கையாள்வது என்று கற்றுத்தேர்ந்து அவற்றை ஆட்சி செய்தவர். ஒளிபரப்புத்துறையில் அல்லது ஒலிபரப்புத் துறையில் இன்று பாவிக்கப்படும் பல புதிய சொற்களைக் குழந்தைகளாகக் கண்டவர். வர்த்தக விளம்பரத்துறையில் விருப்பப்பட்டாலும் தேசியசேவையில் இணைந்தமையால் பல அறிஞர்களுடனும் அரசியற் பிரமுகர்களுடனும் தொடர்புற்ற ஊடகரானவர். அவரது தொடர்பை நாட்டுக்கூத்திலிருந்து அரசியல் தலைவர்கள் வரைக்கும் நீட்டிப் பரவி தமது அறிவையும் தேடலையும் வளப்படுத்தியவர். அதனால் எல்லாத்துறைகளிலும் பேசப்படும் ஊடகச் சொற்கள் அவரது நாவில் தவழ்ந்து வானலைகளில் கலந்தன என்றால் மிகையல்ல.

மதி அண்ணருடன் ரூபவாஹினியில் எனக்குத் தயாரிக்க வழங்கப்படும் அபிவிருத்தி தொடர்பான நேர்காணல் நிகழ்ச்சிகள், விவரண உரைகள்(narration) செய்த போது அவரது இதழ் ஊடக அனுபவச் சிறப்பியல்புகளை நன்கு அறிந்தேன். ரூபவாஹினியில் மட்டுமன்றி, இலங்கையின் முதலாவது காலை நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியான ஆயுபோவன் நிகழ்ச்சியில் அதன் பிரதான தயாரிப்பாளரான மகேந்த்ரா ஸ்டெம்போவுடன் நான் தமிழ் அம்சங்களுக்கான தயாரிப்பாளராகப் பணியாற்றியபோதுதான் மதி அண்ணருடன் நேரடி ஒளிபரப்பொன்றில் பங்காற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தமக்கேயுரித்தான நிதானத்துடன் நேரடி ஒளிபரப்பு, அதுவும் அரச ஊடகம் என்ற நிலைமைகளில் சொல்லவேண்டியவற்றை பிசகாமல் சொல்லுதல் என்ற விடயத்தில் அவரது நேரடி அறிவிப்புச் சொற்கள் -பிற்காலத்தில் எனது தயாரிப்பில் பங்காற்றும் அறிவிப்பாளர்களை வழிநடத்த உதவிய ஒரு பட்டறையின் முகவாசகம் போலத் தோன்றியது என்பேன்.

ரூபவாஹினியில் பணியாற்றிய வேளையில் தான் மதியழகன் அண்ணருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.அதற்கு முன்னர் அவரை நான் நேரடியாகக் கண்டு பழகியதில்லை. காதாலும் கண்ணாலுமே அவர் முதலில் என்னுடன் அறிமுகம்.

ஆனால், நேரில் பழக்கத்தொடங்கிய முதல் நாளே நீண்ட காலம் பழகிய ஒரு நண்பர் போல பழகினார். அவரது சொற்களால் ஆட்சி செய்யும் பண்பில் அதுவும் ஒன்று என்பேன்.

தொலைக்காட்சித் தயாரிப்பு என்பதன் தொழில்நுட்ப விடயத்தில் அவருக்குத் தொடர்பு இல்லாதபோதிலும், ஒளி ஊடகத்துறைக்குப் புதியவனான எனக்கு அத்தகையதோர் சூழலில் நான் செய்த பயணத்தில் அவரும் ஒரு வழிகாட்டி, மரநிழல், தரிப்பிடம் என்பேன்.

பத்திரிகை , வானொலி , தொலைக்காட்சி என்பவற்றில் இலங்கைத் தமிழ் ஊடகங்கள் தமிழுக்கு ஆற்றிய சிறப்பான வகிபாகம் பற்றி நான் இங்கு விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை .

செய்திகள் வாசிப்பவரா, செய்திகள் வாசிப்பதா சரி என ஒரு சிரேஷ்ட அறிவிப்பாளர் பணிப்பாளரிடம் கேட்டதாகவும் தமிழகத்தில் வாசிப்பது என்றுதானே வாசிக்கிறார்கள். நாமும் வாசிக்கலாமே என்று அவர் கேட்க தமிழறிவில் சிறந்த தேர்ச்சி பெற்ற அந்தப் பணிப்பாளர் ஆடு மாடுகள் தான் வாசிக்கும், மனிதர்கள் வாசிப்பார்கள். நீர் இவற்றில் எது எனக் கேட்டதாகவும் இலங்கை வானொலி பற்றி ஒரு சுவையான கதை உண்டு.

தமிழக ஊடகங்களில் இப்படிச் செய்தித்தலைப்புகள் இடுகிறார்கள் . நாங்களும் இடலாமே - என்று கேட்டபோது , " சொற்களோடு விளையாடாதேயும்'' - என்று முன்னாள் வீரகேசரி பிரதம ஆசிரியர் அமரர் சிவப்பிரகாசம் சொன்னதாக கமலா தம்பிராஜா ஒருமுறை சொன்னார்.

இத்தகைய பாரம்பரிய சிறப்பு மிக்க தமிழ் ஊடகங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், சொல்லின் காவலர் ஒருவருக்கு விழா எடுப்பது அதற்குப் பெருமை தரும் விடயமாகும் என ஒன்றிய நண்பர்களை வாழ்த்துகிறேன்.

**எஸ்.எம்.வரதராஜன்**
**நியூசிலாந்து**

## இன்றைய நாளில்...

* 1803 – பிரித்தானிய அறிவியலாளர் ஜோன் டால்ட்டன் வெவ்வேறு மூலகங்களின் அணுக்களை வேறுபடுத்துவதற்கு சின்னங்கள் பயன்படுத்த ஆரம்பித்தார்.
* 1873 – இலங்கையில் புதிதாக வடமத்திய மாகாணம் அமைக்கப்பட்டு, மொத்தம் இலங்கையின் மாகாணங்கள் ஏழாக அதிகரிக்கப்பட்டன. ஜே. இ. டிக்சன் அதன் முதலாவது அரச ஜனாதிபதி ஆனார்.
* 1946 – இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி. எஸ். சேனநாயக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.
* 1951 – தமிழகத்தில் தினமலர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.
* 1965 – இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியா பாகிஸ்தானைத் தாக்கி, லாகூரை ஒரு மணி நேரத்தில் கைப்பற்றப் போவதாக அறிவித்தது.
* 1966 – தென்னாபிரிக்காவின் இனவொதுக்கலின் காரணகர்த்தா பிரதமர் என்ட்றிக் வெர்வேர்ட் கேப் டவுன் நகரில் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.
* 1990 – யாழ்ப்பாணக் கோட்டை மீதான புலிகளின் முற்றுகையின் போது இலங்கையின் குண்டுவீச்சு விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
* 2003 – பலஸ்தீனப் பிரதமர் மஹ்முத் அப்பாஸ் பதவி விலகினார்.
* 2007 – ஓச்சாட் நடவடிக்கை: சிரியாவின் அணுக்கரு உலையை அழிக்க இஸ்ரேல் வான் தாக்குதலை மேற்கொண்டது.

## நக்கல் நமசிவாயம்

ஈஸ்ரர் தின தாக்குதலுக்கு நீதி கிடைக்குதோ இல்லையோ அதை வச்சு நல்லா அரசியல் செய்யுறாங்கள் எண்டு மட்டும் தெரியுது...



# அமைச்சரவைத் தீர்மானங்கள்




**04.09.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. நீர் முகாமைத்துவ தேவைகளை அவசர நிலைமையாகக் கருதி ஒருங்கிணைந்த அணுகுமுறையின்கீழ் நடவடிக்கைகளை எடுத்தல்**

கடந்த காலங்களில் நிலவிய வறட்சியான காலநிலையால் நாடளாவிய ரீதியில் 17 மாவட்டங்களில் 70 பிரதேச செயலகப் பிரதேசங்களில் வசிக்கின்ற 84,000 குடும்பங்கள் குடிநீர்ப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளமையை, அனர்த்த நிவாரண நிலையம் 2023.08.22 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்நிலைமையின்கீழ் நாட்டில் அமைந்துள்ள நீர்த்தேக்கங்களில் போதியளவு நீர்க் கொள்ளளவை சேகரிக்கும் வரை தற்போது காணப்படுகின்ற நீர்க்கொள்ளளவை சிறந்த முறையில் பயன்படுத்தவும் முகாமைத்துவம் செய்யப்படவும் வேண்டியுள்ளது. அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய நீர்வளக் கொள்கைக்கமைய குடிநீர் வழங்கலுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதுடன், ஏனைய நீர்ப் பங்கீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கும் அரசுக்குப் பொறுப்புண்டு. அதற்கமைய போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கும் வரைக்கும் குடிநீர் வழங்கலை அவசர மற்றும் முன்னுரிமைத் தேவையாகக் கருத்திற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேசிய நீர்வளக் கொள்கை மூலம் முன்மொழியப்பட்டுள்ள தேசிய நீர்வளச் சபையை அவசர செயற்குழுவாக மேற்கொள்ளவும், அரச உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர், நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் ஒருங்கிணைந்து சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**02. பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் 2023ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு முடிவடையும் போதான முன்னேற்றங்கள்**

நிரல் அமைச்சுகள் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்ட 202 பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களில் 2023ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு முடிவடையும்போது அடையப்பெற்ற முன்னேற்றங்கள் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள அறிக்கையை அமைச்சரவை கவனத்திற்கொண்டுள்ளது. தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கடன் மீள்கட்டமைப்பு செயன்முறை முடிவடையும் வரை வெளிநாட்டு நிதியனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்குரிய நிதியைப் பயன்படுத்த முடியாமை மற்றும் உள்ளூர் நிதி விடுவித்தலும் மட்டுப்படுத்தப் படுகின்றமையால் 2023ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு முடிவடையும்போது பல கருத்திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்க்கின்ற மட்டத்தை விடவும் கீழ்மட்டத்தில் காணப்படுகின்றமையை அமைச்சரவை கருத்திற்கொண்டுள்ளது. அதற்கமைய, கடன் மீள்கட்டமைப்பு முடிவடைந்த பின்னர் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்துவதற்கு இயலுமை கிட்டும் வரை தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களில் அரசின் 2048ஆம் ஆண்டு இலக்கை அடைவதற்கும், தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் ஒத்துழைப்புகளை வழங்கக்கூடிய கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி 2024ஆம் ஆண்டில் நிதியொதுக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**03. தொழில் வழிகாட்டல் மூலம் மூன்றாம் நிலைக் கல்வியை ஊக்குவித்தல்**

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையைப் பூர்த்திசெய்கின்ற மாணவர்கள் க.பொ.த. உயர்தரக் கற்கைகளை ஆரம்பிக்கும் வரை அல்லது க.பொ.த. உயர்தரப் பரீட்சையைப் பூர்த்தி செய்கின்ற மாணவர்கள் தொழிற்கல்வியைப் பயில்வதற்கு முன்னர் பாடசாலைகளில் தொழிற்கல்வியின் ஐந்து அடிப்படையான துறைகளை உள்ளடக்கும் வகையில் பாடத்துறையைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்ற வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்கல்விக்கான பொதுவான முக்கியமாக அமைகின்ற தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழியும் அதனுடன் இணையாக மென்திறன்களை விருத்திசெய்யும் வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாவதாக, முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முன்னோடிக் கருத்திட்டமாக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துக் கோட்டக்கல்வி வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட 320 பாடசாலைகளில் 3-4 மாத காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்துவதற்கும், பின்னர் முன்னோடிக் கருத்திட்டத்தின் விளைவாக 2024ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த கருத்திட்டம் தேசிய வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தவும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள காணித்துண்டுகள் சிலவற்றிலுள்ள 'அணுகுவழி சேவக உரித்தை' இலங்கை மின்சார சபையின் நிலத்தடி குழாய்த் தொகுதிகளைப் பொருத்துவதற்காக குத்தகைக்கு வழங்கல்**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள 69 ஏக்கர் காணித்துண்டில் 1997ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபைக்கு விற்பனை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன், அதிலொரு பகுதியில் யுகதனவி மின்னுற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. குறித்த காணியின் எஞ்சிய பகுதியில் தற்போது சொபதனவி மின்னுற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. குறித்த மின்னுற்பத்தி நிலையத்துக்கான நிலத்தடி குளிரூட்டும் குழாய்த்தொகுதி மற்றும் நிலத்தடி எரிபொருள் குழாய்த்தொகுதியை நிர்மாணிக்கவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்காக, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள ஒருசில காணித்துண்டுகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், குறித்த காணித்துண்டுகளின் 'அணுகுவழி சேவக உரித்து' உபகுத்தகை வழங்கல் உரித்துடன் இலங்கை மின்சார சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. கிருலப்பனை, டீ.எம்.கொலம்பகே மாவத்தையில் அமைந்துள்ள காணித் துண்டை வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன நலன்புரி மன்றத்திற்கு வழங்கல்**

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நடத்தப்படுகின்ற தேசிய மற்றும் சமய வைபவங்கள் உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்காக தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தருகின்ற தேரர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக உத்தியோகபூர்வ துறவு மடமொன்றை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான காணித்துண்டொன்றை வழங்குமாறு கண்டி அஸ்கிரிய மகாவிகாரையின் மகாநாயக்க தேரர் கோரிக்கை விடுத்துள்ளார். அதற்காக, கிருலப்பனை, டீ.எம்.கொலம்பகே மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 27 பேர்ச்சர்ஸ் காணித்துண்டொன்று அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், குறித்த காணித்துண்டை பிக்குகள் துறவு மடமொன்றை நிர்மாணிப்பதற்காக வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன நலன்புரி மன்றத்துக்கு விடுவிப்பு வழங்கல் பத்திரத்தின் மூலம் ஒப்படைப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு, கொமரோசு ஒன்றியம் மற்றும் சாவோதொமே மற்றும் பிறின்சிப்பி ஜனநாயக குடியரசுடன் இராஜதந்திர தொடர்புகளை நிறுவுதல்**

ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக் கப்பட்ட 54 தன்னாதிக்க அரசுகள் ஆபிரிக்க வலயத்தில் காணப்படுகின்றன. அவற்றில் 46 நாடுகளுடன் இலங்கை இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், மேலும் 06 நாடுகளின் உடன்பாடுகளை எதிர்பார்த்துள்ளது. அதற்கமைய, ஆபிரிக்க வலயத்தில் கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள தீவுகளுடன் கூடிய கொமரோசு ஒன்றியம் மற்றும் கினியா வளைகுடாவில் அமைந்துள்ள ஆபிரிக்கத் தீவான தொமே மற்றும் பிறின்சிப்பி ஜனநாயக குடியரசுடன் இராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. தொழிலுக்குப் புலம்பெயர்தல் பற்றிய தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் 2023 - 2027**

இலங்கையின் புலம்பெயர் தொழில் பற்றிய முதலாவது கொள்கை தேசிய புலம்பெயர் தொழில் கொள்கையாக 2008ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த கொள்கை, குறித்த அமைச்சு, புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள், தனியார் துறை, சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கல்வியியலாளர்கள், ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்கள் உள்ளிட்ட புலம்பெயர் தொழிற்றுறையில் அனைத்துத் தரப்பினர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து மீண்டும் மீளாய்வுசெய்து, தொழிலுக்காகப் புலம்பெயர்தல் பற்றிய தேசிய இலங்கை தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் 2023-2027 வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் கொள்கைச் சட்டங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் 2023-2027 இனை நடைமுறைப்படுத்துவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்திகளைப் பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகளை வகுத்தல்**

இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்தித் தயாரிப்பின்போதும் மற்றும் பெற்றோல் அல்லது டீசல் பாவனையில் இயங்குகின்ற முச்சக்கர மோட்டார் ஊர்திகள் மின்சக்தியில் இயங்குவதற்கு இயலுமாகும் வகையில் மாற்றியமைக்கும்போதும் அதற்காக இலத்திரன் ஏற்றப்பட்ட பற்றறிகள் பயன்படுத்தப்படுவதால், அவ்வாறான முச்சக்கர மோட்டார் ஊர்திகளின் வெறும் வாகன நிறை 500 கிலோகிராமை விஞ்சுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், மோட்டார் வாகனச் சட்டத்தின் பொருள்கோடலுக்கமைய மோட்டார் முச்சக்கரவண்டியின் வெறும் வாகன நிறை 500 கிலோகிராமும், வாகன மொத்த நிறை 1000 கிலோவை விஞ்சாத வகையில் இருத்தல் வேண்டும். அதற்கமைய, இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்திகளைப் பதிவுசெய்வதிலுள்ள தடைகளை நீக்கி மோட்டார் வாகன சட்டத்தைத் திருத்துவதற்காக 2022.08.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 1972ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வாடகைச் சட்டத்தை இரத்துச் செய்தல் மற்றும் குடியிருப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்தல்**

காணி உரிமையாளர்கள் மற்றும் வாடகைக் குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைத் திட்டவட்டமாக நிர்ணயிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட 1972ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வாடகைச் சட்டம் பல சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த சட்டத்தின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள வாடகைச் சட்டம் தொடர்பான ஆலோசனைக் குழு இதுபற்றிய விடயங்களை ஆராய்ந்துள்ளதுடன், அதற்கமைய வாடகைக் குடியிருப்பாளர் மற்றும் காணி உரிமையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் சட்டமொன்றை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த முன்மொழிவைக் கருத்திற்கொண்டு 1972ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வாடகைச் சட்டத்தை இரத்துச்செய்தல் மற்றும் குடியிருப்பாளர்களைப் பாதுகாத்தல் எனும் பெயரிலான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 1992ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டத்துக்கான திருத்தம்**

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 1992ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டத்தை திருத்தம் செய்யவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. இணையவழி முறைகளின் பாதுகாப்புப் பற்றிய சட்டமூலம்**

இணையத்தளத்தினூடாக இடம்பெறுகின்ற உண்மைக்குப் புறம்பான தகவல்கள் மற்றும் திட்டமிட்டு தீங்கிழைக்கும் நடத்தைகள் மூலம் இடம்பெறுகின்ற பாதிப்புகளிலிருந்து பொதுச் சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்கில் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இணையவழி முறைகளின் பாதுகாப்பு பற்றிய சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தின் IIIஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கீழ்வரும் செயல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மூலம் தண்டனைக்குரிய குற்றங்களாகப் பொருள்கோடல் செய்யப் பட்டுள்ளன.

★ இலங்கைக்குள் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக உண்மைக்குப் புறம்பான கதைகளைத் தொடர்பூட்டல்.

★ இழிவுபடுத் தலுக்கு ஏதுவாக அமைந்துள்ள உண்மைக்குப் புறம்பான கதைகளை வெளியிடல்.

★ உண்மைக்குப் புறம்பான தகவல்கள் மூலம் கலவரங்களை ஏற்படுத்தும் வகையில் வெறுமனே கோபமூட்டல்.

★ உண்மைக்குப் புறம்பான கூற்றுகள் மூலம் மதக் கூட்டங்களுக்குத் தடைகளை ஏற்படுத்தல்.

★ மத உணர்வுகளைப் புண்படுத்தும் உள்நோக்கில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை தொடர்பூட்டல்.

★ மத உணர்வுகளை நிந்தனை செய்யும் வகையில் திட்டமிட்டு தீங்கிழைக்கும் நோக்கில் உண்மைக்குப் புறம்பான கூற்றுகளை தொடர்பூட்டல்.

★ மோசடி செய்தல்.

★ ஆள்மாறாட்டம் செய்து மோசடி செய்தல்.

★ அமைதியைக் குலைக்கும் நோக்கில் கோபமூட்டும் உள்நோக்கில் உண்மைக்குப் புறம்பான கூற்றுகள் மூலம் தீங்கிழைக்கும் உள்நோக்கில் நிந்தனை செய்தல்.

★ கிளர்ச்சியோ அல்லது அரசுக்கு எதிரான தவறொன்றை மேற்கொள்ளும்போது உள்நோக்கத்துடன் கூற்றொன்றை தொகுத்தல்.

★ தொல்லைகளை மேற்கொள்ளும் நோக்கில் சம்பவங்கள் பற்றிய கூற்றுகளை தொடர்பூட்டல்.

★ சிறுவர் துஷ்பிரயோகம்.

★ தவறொன்றை மேற்கொள்வதற்காக நாடாக்குறிப்பு (Bot) தயாரித்தல் அல்லது மாற்றியமைத்தல்

அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்து பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிட்டு பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப் பதற்காக 2022.09.05 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், அதற்கமைய குறித்த சட்டமூலம் 2023.03.22 அன்று அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர், ஆர்வலர்கள் பலர் (உள்ளூர் மற்றும் சர்வதேச) குறித்த சட்டமூலத்தில் ஒருசில பிரிவுகள் பற்றிய கருத்துகளை முன்வைத்திருந்தனர். அதற்கமைய, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு மின்னியல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக ஆர்வங்காட்டும் தரப்பினர்களை முறைசார்ந்த வகையில் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஒருசில தரப்பினர்களுடன் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். அதற்கமைய, முன்வைக்கப்பட்டுள்ள அனைத்துக் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளையும் கருத்திற்கொண்டு அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஆரம்ப சட்டமூலத்தை மீண்டும் திருத்தியமைத்து புதிய சட்டமூலத்தை சட்டவரைஞர் மூலம் தயாரிப்பதற்கான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த புதிய சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (05.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 200.8730 | 212.0386 |
| கனேடியன் டொலர் | 229.8344 | 241.5298 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.4437 | 45.3907 |
| யூரோ | 338.1376 | 354.3514 |
| ஜப்பான் யென் | 2.1396 | 2.2388 |
| சிங்கப்பூர் டொலர் | 230.7341 | 242.2037 |
| ஸ்ரேலிங் பவுன் | 396.1830 | 413.7666 |
| சுவிஸ் பிராங்க் | 352.6376 | 372.1470 |
| ஐ.அ. டொலர் | 314.8702 | 326.6530 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 849.8423 |
| குவைட் | குவைட் தினார் | 1,038.6701 |
| ஓமான் | ஓமான் றியால் | 832.1826 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.8831 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.4090 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.2227 |

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
திங்கட்கிழமை 2023.09.04 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** – சீட்டிழுப்பு இலக்கம் 5227 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,896,464.00
ஆங்கில எழுத்து N – வெற்றி இலக்கங்கள் 6 6 0 9 3 0

**கொவிசெத** – சீட்டிழுப்பு இலக்கம் 3469 – சீட்டிழுப்பு திகதி 2023.09.04 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,271,108.00
ஆங்கில எழுத்து A – வெற்றி இலக்கங்கள் 09 23 41 68 – விசேட எழுத்து A – இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 26085

**லக்கி 7** – திகதி 04.09.2023 – சீட்டிழுப்பு இலக்கம் 0053
வெற்றி இலக்கினம் கன்னி – வெற்றி இலக்கங்கள் 6 9 4 5 2 2 – L7 இலக்கம் 1 4
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,564,764.16

**தன நிதானய** – தேதி 2023/09/04 – சீட்டிழுப்பு இலக்கம் 1257 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,049,685.60
ஆங்கில எழுத்து X – வெற்றி இலக்கங்கள் 34 53 62 65 – விஷேட ஆங்கில எழுத்து X
Double Chance இலக்கம் 19290

**ராசி சுப பலன்** Handahana – சீட்டிழுப்பு திகதி 2023-09-04 – சீட்டிழுப்பு இலக்கம் 536 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,181,890.40
வெற்றி இலக்கினம் விருச்சிகம் – வெற்றி இலக்கங்கள் 05 23 37 57 – விசேட இலக்கினம் விருச்சிகம்

**Mega POWER** – சீட்டிழுப்பு இலக்கம் 1575 – 04/09/2023 – 68258 – அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,551,764.00
ஆங்கில எழுத்து A – சுப்பர் இலக்கம் 10 – வெற்றி இலக்கங்கள் 21 25 32 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## வட மாகாணத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி கலைப் பிரிவில் முதலிடம்



2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் (04) மாலை வெளியாகிய நிலையில், அதன் பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் கலைப்பிரிவில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்தவரும் புதுக்குளம் மகா வித்தியாலய மாணவியுமான செல்வி ராம்குமார் கவிப்பிரியா தமிழ், விவசாய விஞ்ஞானம், புவியியல் ஆகிய பாடங்களில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 194ஆவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள்

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன. அந்தவகையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சிறந்த பெறுபேறுகள் வருமாறு,

**கணிதப் பிரிவு**

கே.கீர்த்தனன் - 3ஏ, கே.கஜாணன் -1ஏ 2பி, கே.உஷாந்தன் - ஏ பி சி, என்.குகநாதன் - 1பி 2சி, எஸ்.திவ்யா - 3சி, பி.சதுர்சன் - பி சி எஸ், எம்.தமிழோவியன் - பி சி எஸ், கே.பவோஷிகா - பி 2எஸ், வி.நிரோஜன் - பி சி எஸ், ரி.அனோஜன் - 3சி.

**உயிரியல் பிரிவு**

எஸ்.சுகிர்தன் - 2பி 1சி, எம்.கிருஷன் - 1பி 2சி, கே.ஹர்ஷிகா - 2ஏ 1சி, பி.பவசாந் - ஏ பி சி, கே.பிரியங்கா - 1ஏ 2பி, ஈ.சங்குகன் - 2பி 1சி, எஸ்.சைதன்யா - 3சி.

**இயந்திரவியல் தொழில்நுட்பப் பிரிவு**

வி.இமயன் - 1ஏ 2பி, எம்.யதுசன் - 1ஏ 2பி, ஏ.தர்சினி - 2ஏ 1சி, ஏ.தர்மினி - ஏ பி சி, கே.இனியவன் - 3சி, கே.தியானிகா - 1பி 2சி, ஜே.டெஜிவன் - பி சி எஸ், எஸ்.கஸ்தூரி - 2சி 1எஸ், எஸ்.கௌசலா - பி சி எஸ், எஸ்.கிருஷன் - பி சி எஸ், எஸ்.ராஜகரன் - 3சி.

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு**

ரி.இசைச்செல்வி - 3பி, எஸ்.ஜினித்தா - 2பி 1சி, எம்.டோமியா - 2பி 1சி, ஜி.கோவர்தனி - 1பி 2சி, பி.ரசீந்தினி - 1பி 2சி, ஜே.ஜெசிகா - பி சி எஸ், பி.கேசவன் - 3சி, ஜே.கோமா - 2சி 1எஸ்.

**வர்த்தகப் பிரிவு**

கே.விஷ்ணுஜன் - 3ஏ, எஸ்.லக்சனா - 2பி 1சி, ஜி.குகப்பிரியா - 2பி 1சி.

**கலைப் பிரிவு**

எஸ்.டிலக்சனா - 2ஏ 1பி, ஜே.யதுஷாயினி - ஏ பி சி, எஸ்.சுசாந்தன் - 1ஏ 2பி, ரி.அபிராமி - 1ஏ 2பி, கே.சசிகா - 1ஏ 2பி.

## மாமடு குளத்தில் புதையுண்ட யானை மீட்பு



**வவுனியா நிருபர்**

வவுனியா, மாமடு குளத்தின் நீரேந்து பகுதியில் சேற்றினுள் புதையுண்ட நிலையில் 05 வயது யானையை நேற்று முன்தினம் (04) மீட்டுள்ளதாக வனஜீவ ராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்துப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற கிராமவாசி ஒருவர் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்குப் போராடுவதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, மாமடு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் யானையை மீட்பதற்கான நடவடிக்கையை வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸார் மற்றும் கிராம மக்கள் இணைந்து முன்னெடுத்ததுடன், யானை மீட்கப்பட்டு பாதுகாப்பாக காட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கடும் வெப்பம் காரணமாக நீரைப் பெற வந்த யானையே நீரேந்துப் பகுதியில் புதைந்திருக்கலாம் எனவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

## கொடிகாமம் பெரிய நாவலடி வீதிக்கு பிரதேச சபையால் அடிக்கல் நடல்



**சாவகச்சேரி நிருபர்**

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பெரிய நாவலடி வீதிக்கான (நவிண்டான் முதலாம் வீதி) அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று (05) செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் வை.ஜெகதாஸின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீதி தார் வீதியாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் மயூரன், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கிராம மட்ட பொது அமைப்புகள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவன் கணிதப் பிரிவில் முதலாமிடம்

**மன்னார் நகர் நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான நிலையில், அடம்பன் வண்ணாகுளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மடு. கல்வி வலயத்திலுள்ள அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவன் தியாகன் தேவகரன் கணிதப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியாக முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

## மன்./புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் விஞ்ஞானப் பிரிவில் முதலிடம்

**மன்னார் நகர் நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான நிலையில் மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியைச் சேர்ந்தவரும் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவனுமான அன்ரனி சரோன் டயஸ் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களிலும் 2ஏ, பி தர சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 801ஆம் இடத்தையும் பெற்று மாவட்டத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவி வர்த்தகப் பிரிவில் முதலிடம்



**மன்னார் நகர் நிருபர்**

இறுதி யுத்தத்தில் தந்தையை இழந்து தாய் மற்றும் அப்பம்மா ஆகியோரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த டொறின் ரூபகாந்தன் என்ற முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவி கடந்த 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் (04) மாலை வெளியான நிலையில், அதன் பெறுபேறுகளின் அடிப்படையில், வர்த்தகப் பிரிவில் பொருளியல், வணிகம், கணக்கியல் ஆகிய பாடங்களில் 3 ஏ சித்தியையும் ஆங்கிலப் பாடத்தில் எஸ் பெறுபேற்றையும் பெற்று மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தையும் தேசிய மட்டத்தில் 728ஆவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## வடமாகாண ஆங்கில தினப் போட்டியில் வவுனியா வடக்கு கல்வி வலய மாணவி முதலிடம்



**வவுனியா நிருபர்**

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நடைபெற்று அதன் முடிவுகள் நேற்று முன்தினம் (04) வெளியாகிய நிலையில், ஆங்கில கட்டுரை எழுதுதல் போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகா வித்தியாலய தரம்-12 மாணவி கி.கிருசாளினி மாகாணத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு வலய மாணவி ஒருவர் ஆங்கில தினப் போட்டி ஒன்றில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெறுவது இதுவே முதல்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாணிக்கக் கற்கள் அகழ்வு; நால்வர் பொலிஸாரால் கைது





**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகிலுள்ள இலங்கை மின்சார சபைக்கு உரித்தான மவுசாக்கலை நீர்த்தேக்க பகுதியில் உள்ள காட்டு மஸ்கெலியா தேயிலை உற்பத்தி நிலையத்துக்கருகிலுள்ள வீட்டில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கற்கள் அகழ்வு இடம்பெற்று வருகிறது என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம்(04) இரவு அந்த இடத்தை மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார, உதவி அதிகாரி நுவான் ஆகியோர் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் சுற்றி வளைத்தனர்.

இதனையடுத்து, அந்த வீட்டின் உட்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த நான்கு பேரை கைது செய்தனர்.

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பசறை பொலிஸாரால் கைது

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீதும்பிட்டிய, குடுகல்பதனை பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த ஏழு பேர் பசறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கசிப்பு உற்பத்திக்கு வைக்கப்பட்டிருந்த அதிகளவு மில்லி லீற்றர் கோடாவும் 750 மில்லி லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பியரட்ணவின் ஆலோசனைக்கமைய சார்ஜன்ட்களான உபுல், நிரஞ்சன், சமில் ஆகிய பொலிஸ் அதிகாரிகள் குழுவினரால் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சந்தேக நபர்களை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

## காதலியை கொடூரமாகத் தாக்கிய இரத்தினக்கல் வியாபாரி கைது!

**ஏ.ஏ.எம்.பாயிஸ்**

இருபத்தி ஒன்பது வயதான யுவதியொருவர் தனது காதலனின் கொடூரமான தாக்குதலுக்கு உள்ளானதால் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற இவர்கள் இருவரும் காதலர்களாக இருந்துவரும் நிலையில், காதலிக்கு கள்ளக்காதல் தொடர்பு இருப்பதாகக் கூறி தனது காதலியை தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்று சித்திரவதை செய்துள்ள நிலையில், படுகாயமுற்ற யுவதி வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதென பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

வத்துப்பிட்டிவல வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யுவதி கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதிலும் அங்கும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் மீண்டும் வத்துப்பிட்டிவல அரச வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இவ்வாறு காதலியைத் தாக்கிய காதலன் இரத்தினபுரி பிரதேசத்தில் இரத்தினக்கல் வியாபாரம் செய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த காதலனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

**உக்குவளை நிருபர்**

உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கல்லூரி அதிபர் எஸ்.எம்.அஸ்லம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படுவதுடன் இச்சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. எனவே, பழைய மாணவர்கள் தவறாது குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.



பிபிலை, இலுக்காபத்தனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பாலஸ்தாபன பூஜைகள் நேற்று (05) வெகு விமரிசையாக நடைபெற்றன. இந் நிகழ்வுகளில் பூஜைகள் இடம்பெற்று அம்பிகைக்கு அபிஷேகம் நடைபெற்றது. பூஜைகளின் இறுதியில், பாலாலயத்தில் ஆலய பரிபாலனசபையினர் மற்றும் குருக்கள், சிற்பியார் ஆகியோர் இணைந்திருந்தனர். **படங்கள்:** பதுளை நிருபர்

## ‘அமுதவிழா’ சிறப்பு மலர் வெளியீடு

**கண்டி நிருபர்**



மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஆதரவில் சமூக சேவையாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதனின் 80ஆவது வயது பூர்த்தியை முன்னிட்டு எழுதப்பட்ட ‘அமுதவிழா’ சிறப்பு மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு கண்டி - யட்டிநுவர வீதியில் அமைந்துள்ள விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதம அதிதியாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர் கலந்து கொள்வார். முதற்பிரதியை கிரிக்கெட் வீரர் முரளிதரனின் தந்தை சேவா ஜோதி எஸ்.முத்தையா பெற்றுக்கொள்வார்.

அதிதிகளாக ஓய்வுநிலை பேராசிரியர் துரை மனோகரன், நாவலப்பிட்டி கதிர்வேலாயுத சுவாமிகள் கோவில் அறங்காவலர் சமூக சமயப் பேச்சாளர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீ காந்தன், மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவையின் செயலாளர் எம்.எம். பீர்முஹம்மத், தேசமான்ய பி.பழணியப்பன், முருகாமலை முருகன் கோவில் பொறுப்பாளர் பெ.செல்லையா, ரத்ன தீபம் புகழ் ராஜா ஜென்கின்ஸ் ரொபர்ட டேனியல் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர்.



ஹல்துமுல்ல களுப்பான ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.



மத்திய மாகாண வாணிப, வர்த்தக சுற்றுலாத்துறை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட “விசிட் கண்டி 2023” என்ற வர்த்தகக் கண்காட்சியை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நேற்று முன்தினம் (04) திறந்து வைத்தார். தேசிய உற்பத்திகள், கைத்தறி உற்பத்திகள், உணவு வகைகள் உட்பட மத்திய மாகாணத்துக்கு உரித்தான பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கண்டி கே.சி.சி. அரங்கில் இடம்பெற்ற கண்காட்சிக்காக பெருமளவு கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. **படங்கள்:** கண்டி நிருபர்

உலக செய்திகள்

# முதன்முறையாக இந்தியாவில் ஜி20 உச்சி மாநாடு




## மாநாட்டு வளாகத்தை அலங்கரிக்கும் 29 நாடுகளின் பாரம்பரிய பொருட்கள்



இந்தியாவில் முதன்முறையாக ஜி20 உச்சி மாநாடு எதிர்வரும் 09ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஜி20 உச்சி மாநாடு நடைபெறும் வளாகம் 29 நாடுகளின் பாரம்பரிய கலைப் பொருட்களால் அலங்கரிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் டெல்லியில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டில் துருக்கி, பிரித்தானியா, அமெரிக்கா, அர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவூதி, தென் ஆபிரிக்கா, தென் கொரியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இது தவிர சிறப்பு அழைப்பாளர்களாக பங்களாதேஷ், எகிப்து, மொரீஷியஸ், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமன், சிங்கப்பூர், ஸ்பெயின் மற்றும் ஐக்கிய அரபு அமீரக தலைவர்களும் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாடு டில்லியிலுள்ள பாரத் மண்டப வளாகத்தில் (பிரகதி மைதானம்) அமைக்கப்பட்டுள்ள சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் 29 நாடுகளின் பல்வேறு பாரம்பரிய கலைப் பொருட்கள் வைக்கப்படவுள்ளன.

சீனாவை 18ஆம் நூற்றாண்டில் ஆண்ட கிங் வம்சத்தைச் சேர்ந்த மிகப்பெரிய ஜாடி, இத்தாலியிலுள்ள அப்போலோ சிலை, 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாக்னா கார்ட்டா சாசனம் உள்ளிட்ட பொருட்கள் மாநாட்டு மண்டபத்தை அலங்கரிக்கவுள்ளன.

இந்தப் பொருட்களை நேரடியாக அங்கு காண முடியும். மேலும் டிஜிட்டல் வடிவில் திரையிலும் இந்தப் பொருட்களின் வீடியோ காட்சிகள் ஒளிபரப்பப்படும்.

இந்தியாவின் சார்பில் 4ஆம் நூற்றாண்டில் (கிறிஸ்து பிறப்புக்கு முன்பு) எழுதப்பட்ட சமஸ்கிருத மொழியை எப்படி எழுதுவது, பேசுவது என்பதை விளக்கும் பாணினி எழுதிய அஷ்டாத்தியாயி நூல் வைக்கப்படும். ஜி20 அமைப்பின் 20 உறுப்பு நாடுகள் சார்பிலும் 09 சிறப்பு அழைப்பாளர்கள் நாடுகள் சார்பிலும் கலைப்பொருட்கள் வைக்கப்படுகின்றன.

பிரான்ஸ் சார்பில் உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம், ஜேர்மனியின் சார்பில் குட்டன் பெர்க் பைபிள் புத்தகம், மெக்சிகோ சார்பில் கோட்லிக் சிலை, ஜப்பான் சார்பில் கோசோட் எனப்படும் ஜப்பானிய பாரம்பரிய ஆடை உள்ளிட்ட கலைப்பொருட்கள் ஜி20 மாநாட்டு மண்டபத்தில் வைக்கப்படும். மாநாட்டில் தலைவர்கள் பங்கேற்ற பின்னர் பொதுமக்களுக்கு பாரத் மண்டபம் திறந்து வைக்கப்படும். அப்போது இந்தப் பொருட்களை பொதுமக்கள் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகத் தலைவர்கள் கண்களில் படாதவாறு திரைச் சீலையிட்டு மறைக்கப்படும் குடிசைகள்




ஜி20 உச்சி மாநாட்டை முன்னிட்டு அங்குள்ள டில்லியிலுள்ள பிரகதி மைதானம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இரவில் பல்வேறு நிறங்களில் ஜொலிக்கத் தொடங்கியுள்ளது.

இதனிடையே டில்லியிலுள்ள குடிசை பகுதியில் தடுப்பு மூலம் மறைக்கப்பட்டிருப்பது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உள்ளிட்ட உலக நாடுகளின் முக்கிய தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். இம்மாநாட்டின்போது, வெளிநாட்டு தலைவர்கள் டில்லியை சுற்றி பார்ப்பார்கள் என்பதால் பிரகதி மைதானத்தில் செயற்கை நீரூற்றுகள், செயற்கை சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் டிஜிட்டல் நீரூற்றுகள், அலங்கார கம்பங்கள், தெற்கு விளக்குகள் போன்றவையும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இதனிடையே டில்லியிலுள்ள குடிசை பகுதியில் தடுப்பு மூலம் மறைக்கப்பட்டிருப்பது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

ஏற்கனவே அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பிரிட்டன் முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆகியோர் குஜராத்துக்கு வந்தபோதும் இதேபோல குடிசைகள் மறைக்கப்பட்டிருந்தன. அதை போலவே டில்லி சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச தலைவர்கள் தங்கும் ஹோட்டல்கள் வரை குடிசை பகுதிகளை மறைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிசைகள் பச்சை நிறத்திலான மிக நீளமான திரை சீலைகள் கொண்டு மறைக்கப்பட்டுள்ளன.

## உதயநிதியின் தலையை வெட்டுபவர்களுக்கு ரூ.10 கோடி

### அயோத்தி சாமியார் அறிவிப்பு



தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் தலையை வெட்டிக் கொண்டுவருபவர்களுக்கு ரூ.10 கோடி பரிசாக வழங்கப்படும் என அயோத்தி சாமியார் பரமஹம்ச ஆச்சார்யா அறிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற சனாதனத்தை ஒழிப்பு மாநாடு என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி, சனாதனத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்கு பதிலாக ஒழிக்க வேண்டும் என்ற தலைப்பு பொருத்தமானது என்றும், டெங்கு, மலேரியா, கொரோனா போன்றவற்றை எதிர்க்கக்கூடாது ஒழிக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

உதயநிதியின் இந்த கருத்துக்கு பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், ''சனாதனத்தை ஒழிக்க வேண்டும் எனக் கூறிய உதயநிதி ஸ்டாலினின் தலையை வெட்டிக்கொண்டுவருபவர்களுக்கு ரூ.10 கோடி சன்மானம் அளிக்கப்படும்'' என உத்தரப் பிரதேச சாமியார் பரமஹம்ச ஆச்சார்யா தெரிவித்துள்ளார்.

மேலும், ''உதயநிதியின் தலையை யாரும் கொண்டு வரவில்லை என்றால், என் கையால் அவரின் தலையைத் துண்டிப்பேன். உதயநிதி தலையைத் துண்டிக்க எனது வாளையும் தயார் செய்துள்ளேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

உதயநிதியின் புகைப்படத்தை கத்தியால் வெட்டிய ஆச்சார்யா, புகைப்படத்தை எரித்து சாம்பலாக்கி மிதித்தார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

வன்முறையைத் தூண்டும் வகையில் இந்த வீடியோ பதிவிடப்பட்டுள்ளதாகவும் பரமஹம்ச ஆச்சார்யா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கருத்துகள் எழுந்து வருகின்றன.

இந்நிலையில், ''எனது தலைக்கு 10 கோடி ரூபா எதற்கு? 10 ரூபா சீப்பு இருந்தால் தானே சீவிக் கொள்வேன்'' என தெரிவித்துள்ள உதயநிதி ஸ்டாலின் 'மிரட்டலுக்கு அஞ்சவோ, கவலைப்படவோ மாட்டேன்'' என தெரிவித்துள்ளார்.

## 'பாரத்'ஆகும் இந்தியா: பெயர் மாற்ற பரிசீலனை

இந்தியாவின் பெயரை 'பாரத்' என்று அதிகாரப்பூர்வமாக மாற்ற மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அந்த கூட்டத்தொடரில் நாட்டின் பெயர் மாற்ற சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படக் கூடும் என டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வெற்றிகரமாக உயர்த்தப்பட்ட ஆதித்யா - எல் 1இன் புவி சுற்றுவட்டப்பாதை




சூரியனின் வெளிப்புறத்தை ஆராய இஸ்ரோ அனுப்பிய ஆதித்யா-எல்1 விண்கலத்தின் புவி சுற்றுவட்டப்பாதை இரண்டாவது முறையாகவும் நேற்று (05) உயர்த்தப்பட்டது.

குறைந்தபட்சம் 282 கிலோமீற்றர் தொலைவிலும் அதிகபட்சமாக 40 ஆயிரத்து 225 கிலோமீற்றர் தொலைவிலும் விண்கலம் இயங்கி வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

பெங்களூர், போர்ட் பிளேர் மற்றும் மொரீஷியசிலுள்ள தரைக்கட்டுப்பாட்டு மையங்களிலிருந்து ஆதித்யா - எல்1 விண்கலத்தை கண்காணித்து வருவதாகவும் மூன்றாவது சுற்றுவட்டப்பாதை உயர்த்தும் நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு நடைபெறும் என்றும் தெரிவித்தனர். ஆதித்யா - எல் 1 விண்கலம் சிறப்பாக செயற்பட்டு வருவதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.

# 200 மின்சார பஸ்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக மின்சாரத்தில் இயங்கும் 200 பஸ்களை கொள்வனவு செய்வதற்காக முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்து பொதுப் போக்குவரத்துகளும் புதை படிவ எரிபொருட்களின் பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

"மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 200 மின்சார பஸ்களை இறக்குமதி செய்ய முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்துக்காக,தற்போது முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கூட்டு முயற்சியாக செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், முதலீட்டாளர்களுக்கு மின்னேற்ற நிலையங்களை நிறுவவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஊடாக, முதலீட்டாளர்கள் முதலீடு செய்த தொகையை குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்திய பிறகு, பஸ்களின் உரிமை அரசாங்கத்துக்கு கிடைக்கும். இதற்காக சீனா, கொரியா உட்பட உலகின் எந்த நாடும் விண்ணப்பிக்கலாம். இது ஒரு முதலீட்டு வாய்ப்பாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்து பொதுப்போக்குவரத்துகளும் புதைபடிவ எரிபொருட்களின் பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பில் சர்வதேச உடன்படிக்கை ஒன்று உள்ளது. கார்பன் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் சுற்றுச்சூழல் கட்டமைப்பைப் பாதுகாக்க இதில் முதலீடு செய்கிறார்கள். மின்சார பஸ்கள் சுற்றுச்சூழலுக்கு பெறுமதியைக் கொண்டு வருவதனால், அந்தப் பெறுமதிக்கு உலகின் பல்வேறு அமைப்புகள் அதிக விலை கொடுத்து வருகின்றன.

மேலும், அரச நிறுவனங்களின் வருமானம் குறைவதைத் தடுக்க அனைத்து நிறுவனங்களையும் டிஜிட்டல் மயமாக்க வேண்டும். புகையிரதம் மற்றும் போக்குவரத்து சபை பஸ்களில் டிக்கெட் வழங்கும் முறைக்குப் பதிலாக மின்னணு அட்டை முறையைக் கொண்டுவருவதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அட்டை அல்லது QR முறைமூலம் பணத்தைப் பயன்படுத்தாமல் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்தால், இந்த ஒவ்வொரு நிறுவனங்களின் வருமானத்தையும் குறைந்தது 50 சதவீதத்தினால் அதிகரிக்கலாம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் 04 வருடங்களுக்குப் பின்னர் துறைமுகத்துக்கு புகையிரதத் தண்டவாளங்கள் அடங்கிய கப்பல் ஒன்று வந்துள்ளது. கொழும்பில் இருந்து பாணந்துறை வரையிலான புகையிரதப் பாதைகள் பழுதடைந்துள்ளன. குறைந்தபட்சம் 05 வருடங்களுக்கு ஒருமுறை கரையோரப் புகையிரதப் பாதைகள் மாற்றப்பட வேண்டும். தண்டவாளங்கள் விரைவாக பழுதடைவதன் காரணமாக புகையிரதத்தின் வேகம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் அலுவலக ஊழியர்கள் உரிய நேரத்தில் பணிக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது - என்றார்.

## அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி மாணவர்கள் சிறந்த சித்தி

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் (2022) பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன. அந்தவகையில், அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

கலைப்பிரிவைச் சேர்ந்த இ.வானதி - 3ஏ சித்திகளையும் இ.இஷானுகா – ஏ,பி,சி சித்திகளையும் உ.மோகனப்பிரியா ஏ, 2சி சித்திகளையும் ச.குகராணி ஏ, 2சி சித்திகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.



**காலி திவிதுறை தோட்டம், எத்கந்துறை-எல்பிடிய அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம் நேற்று முன்தினம் (04) இடம்பெற்றது.**

## கணித - விஞ்ஞானப் பிரிவில் வவுனியா உக்குளாங்குளம் கிராம மாணவர்கள் சாதனை

*சி.திவியா*



வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற உக்குளாங்குளம் கிராம மாணவர்கள் இருவர் கணித - விஞ்ஞானப் பிரிவில் முதலாம் மற்றும் 15ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற உக்குளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விமல்ராஜ் விதுவர்சன் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன், உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த அரசரட்ணம் திசோராஜ் என்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் கணிதப் பிரிவில் 2ஏ, 1பி சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 15ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இருவரும் உக்குளாங்குளம் மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

## அத்தனகலை திஹாரிய அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியின் அதிபராக ஜனாப் நியமனம்



கம்பஹா, அத்தனகலை திஹாரிய அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியின் புதிய அதிபராக ஜனாப் யுதுஆ புர்காண் நேற்று முன்தினம் (04) கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அகில இலங்கை ரீதியில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்வு பரீட்சையில் 06ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிபர்கள் மத்தியில் முதலாம் இடத்தில் சித்தியடைந்தவராவார்.

அதிபர் புர்காண் இதுவரை, கொழும்பு ஹமீத் அல்-ஹுசைனியா தேசிய பாடசாலையின் பிரதி அதிபராகவும் பாதுக்கை முஸ்லிம் மகா வித்தியாலய பிரதி அதிபராகவும் வக தமிழ் மகா வித்தியாலயம், மல்வானை அல்-முபாரக் தேசிய பாடசாலை, கல்-எலிய அலிகார் மத்திய கல்லூரி, பாணந்துறை அளவியா பாடசாலைகளில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதே நேரம் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளின் கல்வி, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறை உள்ளிட்ட பல துறைகளின் முன்னேற்றத்துக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியதுடன் குறித்த பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கும் தொடர் பங்களிப்பினை வழங்கியவர் என்பதும் விசேட அம்சமாகும்.

தேசிய கல்வி நிறுவனத்தின் M Ed மற்றும் PGDE, BED விரிவுரையாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருப்பவர் என்பதும் விசேட அம்சமாகும்.

2019ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான குரு பிரதீபா பிரபா விருதினை அதிபர் AJM Furkhan கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.






சித்தாண்டி - முறக்கொட்டாஞ்சேனை ஸ்ரீமகா பெரியதம்பிரான் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேக பெருச்சாந்தி குடமுழுக்கு நேற்று நடைபெற்றது. **படங்கள்:** வாழைச்சேனை மேலதிக நிருபர்

# பரீட்சையில் சித்தி




உயிரியல் பிரிவில் 3 ஏ சித்திகளைப்பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி தேகா உமாசங்கர், கணிதப்பிரிவில் 3 ஏ சித்திகளைப்பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட திருகோணமலை இந்துக்கல்லூரி மாணவன் பாலகுமார் ராகுல் ஆகியோரைக் காணலாம்.

# ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவன் இஹ்ஜாஸ் மருத்துவத்துறைக்கு தகுதி

மீராவோடை செய்தியாளர்



க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மருத்துவத்துறையில் 3 ஏ சித்தியைப் பெற்று ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவன் முஹம்மட் இஸ்மாயில் முஹம்மட் இஹ்ஜாஸ் மருத்துவத்துறைக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஓட்டமாவடி - 2ஆம் வட்டாரத்தில் வசித்துவரும் இம்மாணவன் அனைத்துப் பாடங்களிலும் ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ள மாணவன் இஹ்ஜாஸூக்கு பாடசாலை அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக், பாடசாலை ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.




நிந்தவூரில் கடலரிப்பு உக்கிரம் என "தமிழன்" பத்திரிகை செவ்வாய்க்கிழமை(05) செய்தி வெளியிட்டுள்ள நிலையில், அப்பகுதிக்கு சென்றிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பைசல் காசிம் எம்.பி. உட்பட கட்சியின் தற்போதைய மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்களுடன் சென்று கடலரிப்பினால் ஏற்பட்டு வரும் பாதிப்புகளை பார்வையிட்டார்.

# சாய்ந்தமருதில் கௌரவிப்பும் நூல் அறிமுகமும்



கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.திலீப் நவாஸ், வகுப் நியாய சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியுமான கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாய சபை நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் மற்றும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. றைசுல் ஹாதி ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் எழுதிய "LAW OF ACTIONS" என்ற நூல் அறிமுகமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வெருகலம்பதி ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி கோவில் தீர்த்தோற்சவம் இன்று

## வேலுண்டு வினை தீர்க்க மயிலுண்டு எமைக்காக்க

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் சின்னக்கதிர்காமம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றதுமான மூர்த்தி, தலம், தீர்த்தம் என முறையாக அமையப்பெற்றதுமான வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் (06) இன்றாகும்.

கடந்த 19.08.2023 சனிக்கிழமை அன்று வளர்ப்பிறை துதியை திதியும் உத்தர நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப வேளையில், கொடிமரத்துக்கு விசேட கிரியைகள் இடம்பெற்றன. மரபு ரீதியான முறையில் ஆலயக் கங்காணம் இராசைய்யா ஞானகணேசன் என்பவரால் கொடிச்சேலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு சிவாச்சாரிய குருமார்களின் வேதமந்திர பாராயணத்துடன் அடியார்களின் அரோகரா கோஷத்துடனும் மங்கள வாத்தியம் முழங்க கொடியேற்றம் இனிதே இடம்பெற்றது.

கதிர்காமத்திலே இயற்கை சூழல் அமையப் பெற்றது போன்று இங்கும் மகாவலி கங்கை, ஏழுமலை, தாமரைத்தடாகம் என்பன அமையப் பெற்று காணப்படுவதுடன் சின்னக் கதிர்காமம் என சிறப்பித்துக் கூறப்படுகிறது.

வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி கோவிலானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலப் பண்புகளைக் கொண்ட ஆலயமாக காணப்படுகிறது.

மதுர மாமரம் நிழல் கொடுக்கவும் மயில்கள் நடனமாடவும் மந்திகளும் மான்களும் இவற்றுடன் நீண்டு வளைந்து ஓடும் வற்றாத மகாவலி கங்கையும் அமையப் பெற்றதுமான புண்ணிய பூமியாகத் திகழும் மட்டக்களப்பு எல்லையில் திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாவடிச்சேனை எனும் இடத்தில் அருள்மிகு வெருகலம்பதி ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி நாமத்தோடு அருள்மிகு கெஜாவல்லி, மஹாவல்லி சமேதமாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

இவ்வாலயத்தில் கிழக்கில் மட்டுமல்லாது நாட்டில் நாலா பாகங்களிலும் இருந்து வரும் சகல இன மக்களும் ஆலயம் வருகைதந்து சுவாமியின் அருளை பெற்றுச் செல்வதை நாம் காணலாம். இன்றைய நாள் இவ்வாலயத்தில் அதிகளவான மக்கள் கூட்டம் வெள்ளமென திரண்டு வருகை தருவது வழக்கமாகும்.

**கோவில் வரலாற்று சரித்திரம்**

ஓர் ஆலயத்தின் மகிமையும் கீர்த்தியும் அதன் பழமையில்தான் வெகுவாக தங்கியுள்ளது. மாகாண ரீதியாக புகழ் பெற்ற ஆலயங்களில் வெருகலம்பதியும் ஒன்று என்பதில் பெருமையடைகிறேன். ஆலயம் தோன்றிய காலம் இதுவரை வரையறுக்கப்படவில்லை. குளக்கோட்ட மன்னனின் வருகையால் தொடர்ந்து புனரமைக்கப்பட்டதற்கான பல ஆதாரங்கள் உள்ளதாக கூறப்படுகிறது.

எனது பார்வைக்கு எட்டியவரை குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த நல்லைநாதர் செட்டியார் என்பவர் தனது நோயைத் தீர்ப்பதற்காக இந்தியாவிலிருந்து கதிர்காமத்துக்குச் செல்வதற்காக இவ்வழியால் யாத்திரை வந்துள்ளார்.

இவர் கடும் குஷ்ட நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். வெருகல் வந்ததும் இரவுப்பொழுதை இவ்விடத்தில் தங்கி நின்று கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதால் ஒரு மரத்தின் கீழ் படுத்து உறங்கினார். அவ்வேளை, முருகன் அசரீரியாக செட்டியாரின் கனவில் தோன்றி தாம் கதிர்காமம் செல்வதை கைவிட்டு இவ்விடத்தில் தனக்கொரு கோவில் அமைக்குமாறு கூறியுள்ளார். அவ்வேளை, செட்டியார் கண்விழித்து தாம் என்ன செய்வது என்று அறியாமல் தடுமாறி மீண்டும் உறங்கி விட்டார். அப்போது முருகன் மீண்டும் கனவில் தோன்றி தங்கநகர் (அரிப்பு) எனும் இடத்தில் திரவியம் (தங்கப் புதையல்) உள்ளது. அதை எடுத்து தமக்கு கோவில் கட்டுமாறு செட்டியாரை பணித்தார். பணியை நிறைவேற்றும் பொருட்டு செட்டியார் கங்கையில் நீராடியபோது அவருக்கு இருந்த குஷ்டநோயும் நீங்கியது. செட்டியாரும் முருகன் கூறிய அருள் வாக்கை ஏற்று திரவியத்தை மீட்டு கோவில் கட்டும் பணியில் ஈடுபட்டார். இவ்வாறு கோவில் கும்பாபிஷேகமும் நடந்தேறியதாக இவ்வாலயத்தின் கர்ண பரம்பரைக் கதை 'மட்டக்களப்பு மாண்மியம்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்




நிகழ்வை நினைவு கூர்வதற்காக செட்டியாரின் உருவச் சிலை ஒன்று ஆலயத்தில் மூலஸ்தானத்தின் வெளிப்பகுதியின் கோபுரத்தில் அமைந்திருப்பதுடன் ஆலய இறுதித் திருவிழா செட்டித் திருவிழா என அழைப்பது இன்றுவரை வழக்கத்தில் உள்ளது.

இதன் பின்னர், குளக்கோட்டனின் கட்டளைப்படி இம் மாவட்டத்தில் பல ஆலயங்களை நிர்வகித்து வந்தநிலையில் சிந்து நாட்டு வேளாளர் குலத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் கங்காணம் எனப்பெயர் வழங்கி இதன்படி நிர்வாகத்தை நடத்தி வந்தார்.

அது இன்றுவரை நடைமுறையில் உள்ளதை அறியலாம்.

சிந்து நாட்டவர் என அழைக்கப்படும் ஈச்சிலம்பற்று, பள்ளிக்குடியிருப்பு, மல்லிகை தீவு, ஆணைத்தீவு ஆகிய நான்கு கிராமங்களிலும் உள்ள மக்களால் குளக் கோட்ட மன்னரின் ஆளுகைக்குட்பட்ட இடங்களாக இக்கிராமங்கள் விளங்கியதாக வரலாறு கூறுகிறது. இதன்படி சிந்து நாட்டு பரம்பரையில் வந்த செல்லப்பிள்ளை இராசைய்யா என்பவரிடம் (முதன்மைக் கங்காணம்) ஆலய நிர்வாகப் பொறுப்பை பரிபாலிப்பதற்கு வழங்கியதாக வரலாறு கூறுகிறது.

அவரது மறைவுக்குப் பிறகு அவரது வழித்தோன்றலான இராசைய்யா ஞானகணேசன் மரபுவழி ரீதியாக முதன்மை கங்காணமாக இக் கோவிலை நிர்வாகத்தினருடன் இணைந்து இன்று வரை நிர்வகித்து வருகிறார். இதனாலேயே அவருக்கு முதல் மரியாதை செய்யப்படுகிறது. 18 திருவிழாக்களின் உபயகாரர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் ஓத்தாசை வழங்குகிறார்கள். ஆலயத்தில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானங்களும் முதன்மை கங்காணத்தின் சம்மதத்தின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படும்.

**சிறப்பம்சம்**

இக் கோவில் ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையும் ஆகமம் சாராத வழிபாட்டு முறையும் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

ஆகமம் சாராத வழிபாட்டு முறையாக




கருதப்படுவது இங்குள்ள கதிர்காம சுவாமியின் வணக்க முறையாகும். கதிர்காமத்தில் இடம்பெறுவது போன்று அதற்கு ஒப்பான மௌன பூசையும் வாயில் சீலையைக் கட்டிக்கொண்டு இப் பூசை நடத்தப்படுவதும் அதற்கு புறம்பாக ஒரு கோவில் அமைக்கப்பட்டு வழிபாட்டு முறைகள் நடைபெற்று வருகின்றன.

கதிர்காம சுவாமி கோவில் ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையாக அதற்கு பக்கத்தில் ஸ்ரீசித்திர வேலாயுதர் சுவாமி வள்ளி - தெய்வானை சகிதம் வீற்றிருந்து ஆகமக் கிரியையுடன் கூடிய பூசையும் திருவிழாக்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், இக் கோவிலுக்கு ஆவணி உத்தரத்தில் கொடியேறி 18 நாட்கள் திருவிழா நடைபெறும்.

உற்சவ விழாக்களில் 13ஆம் நாள் பௌர்ணமி பூரணை தினத்தில் கதிர்காம சுவாமி யானை போல் அமைக்கப்பட்ட தண்டியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் காட்சியோடு அன்றைய தினம் பக்தர்கள் காவடிகளும் கற்பூரச் சட்டிகளும் எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் விசேட உற்சவமாக இவ் விழா இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.

அத்தோடு, இங்கு மாம்பழத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறுவதோடு அருகில் உள்ள வெருகல் மலைக்கு முருகன் சிவ பார்வதியுடன் கோபித்து வெருகல் மலைக்கு போய் பழனி ஆண்டவர் கோலத்தில் காட்சி தருவதும் ஒரு சிறப்பம்சம்.

**மூர்த்தி, தலம், தீர்த்தம்**

இந்தக் கோவிலின் கருவறையில் சுவாமி கம்பீரத்தோடு நிற்கும் நிலையில் அருள் காட்சி தருபவராகவும் நாடி வரும் அடியார்களின் துயரை நீக்கி இன்பம் தருபவராகவும் ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். பரிவார மூர்த்திகளாக விநாயகர், சிவன், வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள் காணப்படுகின்றன.

**திருவிழாக்கள்**

இக் கோவிலில் பல்வேறு திருவிழாக்கள் இனிதே நடைபெற்று இந்து சமயத்தின் பாரம்பரியங்கள், கலை கலாசாரங்கள், தத்துவங்களை பேணிப் பாதுகாத்து வருகிறது.

அந்தவகையில், நவராத்திரி, கந்தசஷ்டி விரதம், கௌரிக் காப்பு, திருவெண்பாவை, கார்த்திகை விளக்கு, வைகாசி விசாகப் பெரு விழாவும் இவ்வாலயத்தில் விசேடமாக நடைபெறுகின்றன.

பிரார்த்தனைகளும் நேர்த்திக்கடன்களும் இங்கு வரும் பக்தர்களுக்கு தீராத கொடிய நோய்களை தீர்த்து தருவதுடன் பில்லிசூனியம், மன நோய், கடன் சுமை போன்றன நீங்கப் பெறுகின்றன. அத்துடன் குழந்தை வரம், திருமண வரம், உத்தியோகம், விவசாயம், வியாபார வளர்ச்சி என்பவற்றைத் தந்து சுவாமி அருள்பாலிக்கின்றார். எனவே, யுத்த அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்து இவ்வாலயம் நிமிர்ந்து நிற்கிறது. முருகன் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்.

**கிரியாகால குருமார்கள் - கோயிலின் பிரதம குரு**

குறித்த ஆலயத்தின் உற்சவ நிகழ்வுகள் யாவும் வேதாகம மாமணி பிரம்ம ஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் அருளாசியுடன் மகோற்சவ பிரதமகுரு கிரிஹா திலகம் பிரம்மஸ்ரீ அ.செல்வராஜக் குருக்கள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச.சிவகுமாரக் குருக்கள் ஆகியோரின் அருளாசியுடன் சசி குழுவின் மங்கள வாத்தியத்துடன் உற்சவம் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**க.ருத்திரன் - ஊடகவியலாளர்**

# திருமலை மாணவர்களுக்கு நியாயம் வழங்குவதில் கிழக்கு ஆளுநர் தோல்வி

## பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவிப்பு

*மீனோடைக்கட்டு செய்தியாளர்*

கிழக்கு மாகாண கல்வித்துறையினரால் திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதியைக் கலைந்து நியாயம் வழங்குவதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தோல்வி கண்டுள்ளார் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், கிழக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கு போதுமானளவு அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றபோதிலும் திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனை சமப்படுத்தி இக்குறையைப் போக்க வுள்ளதாக கிழக்கு ஆளுநர் உறுதியளித்திருந்தார்.

கிழக்கு ஆளுநராக கடமையேற்று 3 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் இந்த ஆசிரியர் சமப்படுத்தல்களை அவரால் செய்ய முடியவில்லை. இந்த விடயத்தில் அவர் உறுதியளித்த காலங்களும் கடந்து விட்டன. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதுடன், இம்மாவட்ட மாணவர்களுக்கு கற்றலில் சமவாய்ப்பு வழங்குவதில் கிழக்கு ஆளுநர் தோல்வி கண்டுள்ளார் என்று கருத வேண்டியுள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன் வழங்கப்பட்ட கல்வியியல் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன்.

கிழக்கில் போதுமானளவு ஆசிரியர்கள் அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதால் சமப்படுத்தல்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியுமெனஅப்போது எனக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

எனினும், இதுவரை திருகோணமலை மாவட்ட



ஆசிரிய பற்றாக்குறை நிவர்த்திக்கப்படவில்லை. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுவரும் அதேவேளை, இம்மாவட்டத்தைச் சேர்ந்த கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களும் வேறு மாகாணங்களுக்கு நிமிக்கப்பட்டதால் பெரும் சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

# தீர்க்கப்படாத காணிப் பிரச்சினை; மட்டக்களப்பில் கலந்துரையாடல்





*கல்லடி செய்தியாளர்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் காணிகள் தொடர்பாக தீர்க்கப்படாத பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் திணைக்களங்களுக்கு முன்வைத்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந் துரையாடலில் ஜனாதிபதி செயலகத்தின் சமூக அலுவல்கள் விவகாரப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் இக்காணிகள் குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

மக்கள் எதிர்கொள்ளும் காணி இழப்பு அல்லது காணியின்மை போன்ற பிரச்சினைகளை ஜனாதிபதிக்கு தெரிவித்து வருகிறார்கள். அதனால் அரசாங்கம் சகல சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களையும் ஒன்றிணைத்து இக்காணிப் பிரச்சினைகளை தீர்த்து நாட்டை வெற்றிகரமான பாதையில் கொண்டுசெல்வதற்காக மாவட்ட மட்டங்களில் இவ்வாறான கலந்துரையாடல்களை நடத்தி, உடனடித் தீர்வை பெற்றுக்கொடுப்பதே நோக்கமென ஜனாதிபதி செயலகத்தின் சமூக அலுவல்கள் விவகாரப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் காணப்படும் அரச, தனியார் மற்றும் விவசாயக் காணிகள் தொடர்பான காணி உரிமைகள், உறுதிப் பத்திரங்களைப் பெறுதல், பயன்படுத்தப்படாது காணப்பட்ட தரிசு நிலங்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் உரிமம் கோரல், காணி இழப்புகள், உரிமம் இருந்தும் எல்லையிடப்படாத காணிகள் வெவ்வேறு திட்டங்களுக்குள் அறிந்தும் அறியாமலும் உள்வாங்கப்பட்டிருத்தல், காணி இல்லாதவர்கள் அரசாங்கத்திடம் காணி கோரல், போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது பிரதேச செயலாளர்களால் முன்வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் இக்காணி விவகாரங்களுடன் தொடர்புபட்ட அரச நிறுவனங்களின் கருத்துகள் பெறப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள், மேற்கொள்ள வேண்டிய மாற்று நடவடிக்கைகள் என்பன தொடர்பாக உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்க ளங்களுக்கு கோரிக்கை விடுத்தார்.

குறிப்பாக, சுனாமி வீட்டுத்திட்டத்தில் வழங்கப் பட்ட வீட்டுக் காணிகளுக்கு இதுவரை உரிமைப் பத்திரங்கள் கிடைக்கப் பெறாதிருப்பின் அவற்றுக் கான அளிப்புப் பத்திரங்களை விரைவில் பெற்றுத் தருவதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் பணிப்பாளர் நாயகம் இங்கு நம்பிக்கை வெளி யிட்டார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, மாகாணக் காணி ஆணையாளர் டி.எம்.ஆர்.சி. தசநாயக்க மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி, ஸ்ரீகாந்த் உட்பட மாவட்டத்தின் சகல அரச திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடி மஹ்பலுல் உலூம் குர்ஆன் மத்ரஸாவின் பரிசளிப்பு விழா







*காத்தான்குடி செய்தியாளர்*

காத்தான்குடி மஹ்பலுல் உலூம் குர்ஆன் மத்ரஸாவின் பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (03) மெத்தைப் பள்ளி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. மத்ரஸாவின் தலைவர் எம். ஐ.எம். ஹாரிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அல்-ஹமீதிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் அல்-ஹாபிழ் மௌலவி எஸ்.எச்.எம்.ரமீஸ் (ஜமாலி), காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா சபை செயலாளர் அல்-ஹாபிழ் மௌலவி எம்.ஐ.எம்.ஜவாஹிர் (பலாஹி) ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினர். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# சாய்ந்தமருது தைபா அரபுக் கல்லூரியில் 08 மாணவிகளுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு

*சாய்ந்தமருது செய்தியாளர்*

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியிலிருந்து இம்முறை 08 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்று கல்லூரி அதிபர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

தற்போது வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றிய 20 மாணவிகளுள் 19 பேர் அனைத்து பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுள் 08 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்றிருப்பதுடன், ஒரு மாணவி மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

கடந்த காலங்களை விட இம்முறை நிறைய 'ஏ' சித்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இக்கல்லூரியில் கடந்த முறை 10 மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றி, 04 மாணவிகள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனப் பற்றி புகழ் பாடுறவங்கள புடிச்சி சிறையில அடையுங்க எண்டு விமல் வீரவங்ச, வீரசேகரா, உதயன்கம்வெல ஆகிய மூணுபேரும் சொல்லியிருக்காங்க எலுவா..?**

**ஒண்டாம்பி மெய்யா.. மெய்யா... இத உடனே செய்யச்சொல்லி ஒருக்கா ரணில் ஐயாட காதுக்குள சொல்லுங்க....**

**அப்பதான் வாறவருஷம் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு சிங்கள மக்களிற ஆதரவு கிடைக்கும் எண்ட விசயத்த சொல்லுங்க...**

**அடே பொடியங்களே உங்களப்போல கொஞ்சப்பேர் இருக்கிறதாலதாண்டா பிரபாகரண்ட புகழ் ஒலகமெல்லாம் பேசப்படுது இத புரிஞ்சா சரி.....!**

# கொக்கட்டிச்சோலையில் ஏர்பூட்டு விழா!





*கல்லடி செய்தியாளர்*

கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தை மேற்கொள் வோர் பண்டைய காலம் தொடக்கம் முன்னெடுக்கும் ஏர்பூட்டு விழா நேற்று செவ்வாய்க்கிழமை (05) கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் ஏற்பாட்டில் கொக்கட்டிச்சோலையிலுள்ள வயல் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்களின் தலைமையில் விசேட பூஜைகள் நடைபெற்று ஏர்பூட்டு விழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாக சபையினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் உட்பட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

விசேட பூஜையைத் தொடர்ந்து ஏர்பூட்டி உழவும் நடவடிக்கைகள் ஆரம்பித்துவைக்கப் பட்டன. அதனைத்தொடர்ந்து விவசாயிகளுக்கு ஆரம்ப ஊதியப் பணமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

## உண்மைக்குப் புறம்பான செய்தியென்கிறார் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்

*புளியந்தீவு செய்தியாளர்*

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானதெனத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா, தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருந்த ஊடகவியலாளர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடக்கின்றபோது சிலர் ஊடகவியலாளர்களென தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு உள் நுழைகிறார்கள்.

அத்தோடு அவர்கள் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் சமூக வலைத்தளங் களில் செய்திகளை பரப்புகிறார்கள். இத்தகைய செயற்பாடு எமக்கு பல சங்கடங்களைத் தோற்றுவிக்கின்றன.



இதனை தவிர்த்துக் கொள்வதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங் கப்பட்ட அடையாள அட்டை உள்ளவர்களை மாத்திரம் நாம் சபா மண்டபத்துக்குள் நுழை வதற்கு அனுமதித்தோம். இச்செயற்பாட்டை யாரும் தப்பாக அர்த்தப் படுத்திக்கொள்ளக் கூடாது.

கூட்டங்கள் நடக்கின்றபோது சிலர் குறுக்கே நின்று வீடியோ எடுத்துக்கொண்டிருப்பார்கள். சிலர் கேள்விகள் கேட்கிறோம் என்று நினைத்துக்கொண்டு பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்பார்கள். இவற்றை கட்டுப்படுத்துவது தவறாகாது. இதனை ஊடகவியலாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# மட்டு. கல்வி வலயத்திலிருந்து 71 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி

## வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தெரிவிப்பு





*மட்டக்களப்பு நிருபர்*

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் சித்தி வீதம் கடந்த வருடத்தைவிட இம்முறை சகல துறைகளிலும் அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சை பெறுபேறு களின் அடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தகுதிபெற்றுள்ள மாணவர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் நேற்று செவ்வாய்க்கிழமை (05) சந்தித்து அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துவிட்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை மட்டக்களப்பு கல்வி வலயத்திலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 71 வீதமானோர் பல்கலைக்கழகங்களுக்கான தகுதியைப் பெற்றுள்ளனர் . அதிலும் இம்முறை உயிரியல் துறையில் அதிகரித்த சித்தி வீதம் காணப்படுகின்றது.

உயிரியல் துறையில் 40இற்கு மேற்பட்ட மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தகுதிபெற்றுள்ளனர். புனித மிக்கேல் கல்லூரி மாணவன் துரைராஜசிங்கம் இமையவன் மாவட்டத்தில் கணிதத்துறையில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அதே பாடசாலையில் உயிரியல் துறையில் செசாங்கன் என்ற மாணவன் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரின் பிரபல பாடசாலைகளான புனித மிக்கேல் கல்லூரி, வின்சன் தேசிய பெண்கள் பாடசாலை, சிசிலியா மகளிர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு மத்திய கல்லூரி, மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.







கல்முனை அல்-பஹ்றியா தேசிய பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனையும் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வும் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசாலின் நெறிப்படுத்தலில் தாய், சேய் நல பொறுப்பு வைத்திய அதிகாரி றிஸ்வின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

**படங்கள்:** இஸ்மாயில்புரம் செய்தியாளர்

# நேபாளத்தை வீழ்த்தி சுப்பர்-4 சுற்றுக்குத் தகுதிபெற்ற இந்தியா




ஆசிய கிண்ணத் தொடரின் லீக் போட்டிகள் நேற்றுடன் நிறைவுக்குவந்த நிலையில், குழு ஏ யிலிருந்து பாகிஸ்தானுக்கு அடுத்து இந்தியா சுப்பர்-4 சுற்றுக்கு தகுதிபெற்றது.

நேற்று பல்லேகலயில் நடைபெற்ற போட்டியில் கட்டாய வெற்றியை இந்தியா மற்றும் நேபாளம் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் அணி 230 ரன்களை குவித்து 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இதையடுத்து, 231 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. 2.1 ஓவர்களின் விக்கெட் இழப்பின்றி 17 ரன்களை எடுத்தது. அப்போது மழை குறுக்கிட்டதால் போட்டி மீண்டும் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் ஆட்டம் தொடங்கி இந்திய அணிக்கு 23 ஓவர்களில் 145 ரன்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இறுதியில் இந்திய அணி 20.1 ஓவர்களில் இலக்கை கடந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்று சுப்பர்-4 சுற்றுக்கு முன்னேறியது. இந்திய அணி அடுத்த சுற்றில் முதல் ஆட்டத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. முன்னதாக இரு அணிகளும் மோதிய ஆட்டம் மழையால் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஞாயிறன்று மீண்டும் இந்தியா - பாக். மோதல்

# உலகக் கிண்ண தொடருக்கான இந்திய குழாம் அறிவிப்பு




ஒக்டோபர் மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான 15 பேர் கொண்ட ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய குழாம் நேற்று வெளியானது.

உலகக்கிண்ண தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நியூசிலாந்து, இங்கிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை ஒக்டோபர் 5ஆம் திகதி சென்னையில் எதிர்கொள்கிறது.

இந்திய அணியில் சஞ்சு சாம்சன் இடம்பெறவில்லை. உப தலைவராக ஹர்திக் பாண்ட்யா நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்பார்க்கப்பட்ட கே.எல். ராகுலும் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

இந்திய அணி விபரம் வருமாறு, ரோஹித், கில், கோஹ்லி, அய்யர், பாண்ட்யா, ஜடேஜா, கே.எல்.ராகுல், குல்தீப், ஷமி, சிராஜ், பும்ரா, தாகூர், சூர்யகுமார், கிஷன், அக்சர்

# இர்பான் பதானின் சாதனையை சமன் செய்த ஜடேஜா




ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவரும் நிலையில், ஆசிய கிண்ணத்தில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய இந்திய வீரர் இர்பான் பதானின் சாதனையை ரவீந்திர ஜடேஜா சமப்படுத்தியுள்ளார்.

நேபாளத்துக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 10 ஓவரில் 40 ஓட்டங்களைக் கொடுத்த ஜடேஜா, 03 விக்கெட்களை வீழ்த்தினார். இதன்மூலம் 50 ஓவர் ஆசிய கிண்ண வரலாற்றில் அதிக விக்கெட்களை சாய்த்த இந்திய பந்து வீச்சாளர் என்ற இர்பான் பதானின் 22 விக்கெட் சாதனையை ஜடேஜா சமன் செய்துள்ளார்.

1. ரவீந்திர ஜடேஜா : 22 விக்கெட்கள் (15 இன்னிங்ஸ், 24.5 சராசரி)
2. இர்பான் பதான் : 22 விக்கெட்கள் (12 இன்னிங்ஸ், 27.5 சராசரி)
3. சச்சின் டெண்டுல்கர் : 17 விக்கெட்கள் (15 இன்னிங்ஸ்)
4. கபில் தேவ் : 15 விக்கெட்கள் (7 இன்னிங்ஸ், 13 சராசரி)

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# மெஸ்ஸி மீது தண்ணீர் போத்தல் தாக்குதல்




லியோனல் மெஸ்ஸி மீது தண்ணீர் போத்தல் வீச்சு மற்றும் ரசிகர் கட்டியணைக்க முற்பட்டது ஆகிய இரு சம்பவங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. எம்.எல்.எஸ். தொடரில் இன்டர் மியாமி அணி 3:1 என்ற கோல் கணக்கில் எல்.ஏ.எவ்.சி அணியை வீழ்த்தியது. போட்டி முடிந்ததும் நட்சத்திர வீரர் மெஸ்ஸி மைதானத்தை விட்டு வெளியேறினார்.

அப்போது தண்ணீர் போத்தல் அவர் மீது வீசப்பட்டது. அதிர்ஷ்டவசமாக மெஸ்ஸி மீது போத்தல் படவில்லை. எனினும், மெஸ்ஸி சற்று பதற்றமடைந்தார்.

அதேபோல் அவரது பின்னால் வந்த பாதுகாவலர் நடுங்கிப்போனார். இதுதொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

மேலும், ஆட்டத்தின்போது ஒரு சம்பவமும் நடந்தது. 73ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி ஜெர்சியை அணிந்திருந்த ரசிகர் ஒருவர் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்தார். அவர் நேராக மெஸ்ஸியை கட்டிப்பிடிக்க முயன்றபோது பாதுகாவலர் அவரை மடக்கிப் பிடித்தார். பின்னர் அவர் வெளியே அனுப்பப் பட்டார்.

# சம்பியனானது அக்கரைப்பற்று டீன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகம்




மீரா நகர் செய்தியாளர்

அக்கரைப்பற்று சொக்கொமோ விளையாட்டு கழகத்தின் 4ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய சொக்கொமோ மெகா நைற் சம்பியன் கிண்ணம் மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சம்பியனாக அக்கரைப்பற்று டீன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகம் தெரிவானது.

48 கிரிக்கெட் அணிகள் பங்குபற்றிய இச் சுற்றுத்தொடர் அணிக்கு 08 பேர் கொண்ட 05 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாகும். அண்மையில் அக்கரைப்பற்று அதாஉல்லா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று லோர்ட்ஸ் அணியும் டீன் ஸ்டார் அணியும் மோதியமை குறிப்பிடத்தக்கது.




நட்சத்திர துடுப்பாட்ட வீரரான கே.எல். ராகுல் முழு உடல் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய கிண்ணத் தொடருக்கான இந்திய குழாத்தில் கே.எல். ராகுல் இடம்பெற்றிருந்தாலும் காயம் காரணமாக முதல் 02 போட்டிகளில் அவர் விளையாடவில்லை. பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகடமியில் சிகிச்சை மற்றும் பயிற்சி எடுத்து வந்த அவர், தற்போது பூரண உடல் தகுதி பெற்றுள்ளார் என இந்திய கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் சுப்பர் 4 சுற்றில் ஆடுவதற்காக கே.எல். ராகுல் இலங்கை பயணிக்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இறுதிப் பதினொருவர் அணியில் கே.எல்.ராகுல் இடம்பெறுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. சிறப்பாக ஆடிவரும் இஷான் கிஷன் நீக்கப்படுவாரா என்றும் ரசிகர்களிடையே கேள்வி எழுந்துள்ளது.




## விளையாட்டுத் துளிகள்

நேபாளத்துக்கு எதிரான இரண்டாவது போட்டியில் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகி மும்பை திரும்பிய இந்திய வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா மீண்டும் இந்திய அணியுடன் இணையவுள்ளார். ஜஸ்பிரித் பும்ரா மற்றும் அவருடைய மனைவி சஞ்சனா கணேசன் தம்பதிக்கு நேற்று முன்தினம் ஆண் குழந்தை பிறந்தது. அதற்காகவே அவர் நாடு திரும்பியிருந்தார்.

............................

நியூசிலாந்து கிரிக்கெட் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகின்றது. செப்டெம்பர் 21, 23 மற்றும் 26ஆம் திகதிகளில் பங்களாதேஷின் டாக்கா நகரில் நடைபெறவுள்ள இந்த ஒருநாள் தொடரில் அனுபவம் குறைந்த வீரர்களுக்கே வாய்ப்பு வழங்கியிருக்கின்றது. அதன்படி, நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவராக வேகப்பந்துவீச்சாளரான லோக்கி பெர்குஸன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

# ரசிகர்களின் செயலால் கடுப்பான கம்பீர்




நேபாள அணிக்கு எதிரான ஆட்டத்தில் வர்ணனையாளராக செயற்பட்ட கௌதம் கம்பீர் செய்த காரியம் ஒன்று பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. விராட் கோஹ்லியை மட்டும் கௌதம் கம்பீர் தனியாக குறி வைத்து விமர்சித்து வருவார். 2023 ஐ.பி.எல். தொடரில் விராட் கோஹ்லியும் லக்னோ அணியின் கௌதம் கம்பீரும் மோதிக்கொண்டனர். அதன்பிறகு கம்பீர் எப்போதெல்லாம் ரசிகர்கள் பார்க்கிறார்களோ அப்போதெல்லாம் 'கோஹ்லி...கோஹ்லி...' என்று கத்தி அவரை வெறுப்பேற்றி வருவது வழக்கமாகும்.

இந்நிலையில், கம்பீர் பார்வையாளர்களுக்கு அருகில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த ரசிகர்கள் 'கோஹ்லி... கோஹ்லி...' என கத்தி அவரை வெறுப்பேற்றினர். இதனால் கடுப்பான கம்பீர் தனது நடு விரலை உயர்த்தி ரசிகர்களுக்கு காட்டினார். இதனை பார்த்ததும் அங்கிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். சொந்த நாட்டு ரசிகர்களின் பெயரை சொந்த ரசிகர்கள் கத்தியதை கூட பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு கம்பீர் அநாகரிகமாக நடந்து கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், அருவருக்கத்தக்கும் வகையில் நடுவிரலை உயர்த்தி இந்திய ரசிகர்களை கம்பீர் அவமானப்படுத்தி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இது குறித்து விளக்கமளித்துள்ள கம்பீர், இந்தியாவுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியதால் தான் தாம் இவ்வாறு செய்தேன் என்று கூறியுள்ளார்.

# கல்முனை சாஹிராவில் ரீ-சேர்ட் அறிமுக நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்



பொலிவேரியன் நிருபர்

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 16 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணிக்கான உத்தியோகபூர்வ ரீ-சேர்ட் அறிமுக நிகழ்வும் மற்றும் மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியமைக்காக சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை (01) பாடசாலையின் காரியப்பர் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபிரின் வழிகாட்டுதலில் உதைப்பந்தாட்ட பொறுப்பாசிரியர் எம்.எம்.ரஜீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாடசாலையின் பிரதி அதிபர் எம்.எல்.ஏ.தன்சீல் உட்பட ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு உரையாற்றிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ.ஜாபிர் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட்டு, தமது திறமைகளை வெளிக்கொணர்ந்துவரும் மாணவர்களைப் பாராட்டி பேசியதோடு, அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர் உட்பட வெற்றிக்காகவும் பாடசாலையின் நற்பெயருக்காகவும் பாடுபட்ட அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக தமது நன்றிகளைத் தெரிவித்தார்.

# நீச்சலில் 53 பதக்கங்களை வென்றது யாழ். இந்து



யாழ். நிருபர்

கொழும்பில் கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற மாகாண மட்ட நீச்சல் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 23 தங்கப்பதக்கங்கள், 15 வெள்ளி பதக்கங்கள், 15 வெண்கலப்பதக்கங்கள் என மொத்தமாக 53 பதக்கங்களை பெற்றது.

வடக்கு மாகாணத்தில் ஒரு பாடசாலை பெற்றுக்கொண்ட அதிகூடிய பதக்கங்கள் இதுவாகும். முதற் தடவையாக இம்முறை அதிகளவு யாழ். இந்து மாணவர்கள் மாகாண மட்ட நீச்சல் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7